


251. 'முகம் காட்ட வல்லேனே?'

மூர்ச்சித்துக் கிடந்து பிறகு தெளிந்து எழுந்த பின் சூர்ப்பணகை செந்நீர் சிந்தும் காதையும் மூக்கையும் சேலையால் ஒத்திக் கொண்டு உலைக் களத் தீயைப்போல் நெடுமூச்செறிந்தாள். கைகளால் நிலத்தில் அறைந்தாள். கடைசியாகத் தன் சுற்றத்தாரின் பெயர்களை யெல்லாம் கூவி யழைத்துப் புலம்பினாள்.

மலையெடுத்த மலையே!

கைலையங்கிரியையும் பெயர்த்தெடுத்த பிரதாப லங்கேச்வரனை நினைத்து, 'தவசிகள் வில்லும் கையுமாகத் திரிபவும் துணிந்துவிட்டார்களே! இது உன்னுடைய பிரதாபத்திற்கும் ஆதிக்கப் பெருமைக்கும் இழுக்கல்லவா?' என்று கூச்சலிடுகிறாள்:

தலையெடுத்து நெடுநிலத்து
　நீ இருக்கத், தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியும்இது
　சிறிதன்றோ? தேவர்எதிர்
தலையெடுத்து விழியாமை
　சமைப்பதே! தழல்எடுத்தான்
மலையெடுத்த தனிமலையே!
　இவைகாண வாராயோ?

[நிலையெடுத்து — நிலைகொண்டு. தாபதர்கள் — தவசிகள்; (இங்கே) தவ வேடம் கொண்ட ராம லட்சுமணர். சிலை — வில். தேவர் எதிர் — தேவர்கள் முன்னிலையில். விழியாமை — விழிக்கக் கூடாதபடி. சமைப்பதே — (இங்கே) செய்துவிடுவதே. தழல் எடுத்தான் — அனலைக் கையில் ஏந்தியுள்ள சிவபெருமான். தனி மலையே — ஒப்பற்ற மலைபோல்பவனே.]

மலை யெடுத்த மலையாக ராவணன் நிலத்திலே நிலைத்திருக்கும்போது, அவனுடைய ஆணை, பயம், அதிகாரம் எங்கும் பரவியிருக்கும்போது, இப்படியும் நடந்து விட்டதே! — என்று தழலாய்க் கொதிக்கிறது சூர்ப்பணகையின் உள்ளம். 'ஆயுதம் தாங்கத் தகுதியில்லாத ஆண்டிகளும் வில்லெடுத்துத் திரிகிறார்களே, என்ன விபரீதம்!' என்று ஆத்திரம் ஒருபுறம். 'தேவர்களை அடிமைகொண்டிருக்கும் நான் அவர்களுக்கு எதிரே தலை யெடுத்து விழிக்க முடியாமலும் ஆகிவிட்டதே!' என்று ஆங்காரம் ஒரு புறம். இப்படிப் படாத பாடு படும் அருமைத் தங்கையைப் பார்க்க வரமாட்டாயோ? — என்பதாக, மகா பராக்கிரமத்துடன் பெரும் புகழ் வாய்ந்த பெரிய அண்ணனின் ஞாபகம் தான் முதலில் வருகிறது,— வேதனையின் வாதனைகளையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு அவமான உணர்ச்சிகளுடன் துடிக்கும் செல்வத் தங்கைக்கு.

அந்த வலிமை எங்கே?

'புலி பின்னே இருக்கப் புலிக் குட்டி பிடிபடாது' என்பார்களாம். 'அந்தப் பொய்யாமொழியும் பொய்ம் மொழியாகி விட்டதே என் விஷயத்தில்!' என்று புலம்பினாள். இவளுக்குப் பின்னே இலங்கையிலிருக்கும் புலியோ, காற்றையும் கூற்றையும், கனலையும் புனலையும், ஆகாயத்தையும் சூரியன் முதலிய கிரகங்களையும் தன் இஷ்டப்படி யெல்லாம் கூத்தாடிக் குற்றேவல் செய்யும்படி அடக்கியாளும் போராற்றல் வாய்ந்திருக்கிறதாம். புலிக்குப் பல், நகம்போல் சிவன் தந்த வாளும் இருக்கிறதாம்.

அப்பேர்ப்பட்ட வலிமை இப்போது இரண்டு மனிதர்களுக்கு ஆற்றாமல் போய்விட்டதா? — என்று துடிக்கிறாள்:

காற்றினையும் புனலினையும்
கனலினையும், கடுங்காலக்
கூற்றினையும், விண்ணினையும்
கோளினையும் பணிகொண்டற்(கு)
ஆற்றினை நீ, ஈண்(டு) இருவர்
மானுடவர்க்(கு) ஆற்றாது
மாற்றினையோ உன்வலத்தை?
சிவன்தடக்கை வாள்கொண்டாய்!

[புனல் — நீர். கடுங்காலக் கூற்று — வாழும் காலத்தை வரையறை செய்து, உடம்பிலிருந்து உயிரைப் பிரித்துக் கொண்டு போகும் கொடிய யமன். விண் — ஆகாயம்; (இங்கே) விண்ணுலகம். கோள் — கிரகங்கள். கொண்டற்கு — கொள்ளுதற்கு. ஆற்றினை — வல்லமை யுடையவன் ஆனாய். ஈண்டு — இங்குள்ள. வலம் — வலிமை.]

ஆள் அழகுதான், ஆனால்?


இவ்வளவு கோபத்திலும் கூட ராம லட்சுமணரின் அழகை மறந்து விடவில்லை இந்த அரக்கி யுள்ளம். 'அழகிலே மன்மத புருஷர்கள். ஆனால் ராவண பராக்கிரமம் எங்கே, இவர்களுடைய மனித பலம் எங்கே?' என்று எண்ணும்போதே, ராம லட்சுமணரைக் குறித்த இகழ்ச்சியும் ராவணனைக் குறித்த புகழ்ச்சியும் எப்படி வருகின்றன வாக்குப் பிரவாகமாய்:

உருப்படிவ மன்மதனை
ஒத்துளரே ஆயினும்,உன்
செருப்படியிற் பொடி ஒவ்வா
மானுடரைச் சீறுதியோ?
நெருப்படியிற் பொடிசிதற
நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத்
தோள்நிமிர்த்த வலியோனே!

[உருப்படிவம் – அழகிய வடிவம். சீறுதியோ – சீறுவாயோ. நெருப்பு அடியில் பொடி சிதற – (அடி வைத்து உக்கிரமாக நடக்கும் போது) அந்த அடிகளால் எழும்பும் பொறி நெருப்புப் பொறி போல் சிதறும்படி. திசை யானை – திக்கஜங்கள். மருப்பு ஒடிய – தந்தங்கள் ஒடிய. பொருப்பு இடிய–மலைகள் இடிய. தோள் நிமிர்த்த – தோள்களை நிமிரச் செய்த.]

இவளுடைய வாக்குப் பிரவாகம் எரிமலையின் நெருப்புப் பிரவாகம் போல் வருகிறது. பாட்டைப் பாடி வல்லோசைகளை அனுபவித்துப் பாருங்கள்.

ராவண பராக்கிரமத்தை நினைத்துப் பார்க்கும்போது — காதலையும் ஒதுக்கிப் பார்க்கும்போது — அந்த அண்ணனின் ‘செருப்படியிற் பொடி ஒவ்வா’த சிறு மானிடராகவே இவள் மனக் கண்ணில் படுகிறார் ராமலட்சுமணர்! அத்தகைய ராவண பராக்கிரமத்தை நினைக்கும்போதே, அவன் அஷ்ட திக்கஜங்களையும் மலைகளையும் வென்று வலியழித்த அந்த வீராவேசம் — அந்தப் பழைய பெருமகிழ்ச்சி–மனக் கண்முன் ஓடி வருகிறது. பூமி அதிரப்போய்த் தந்தம் ஒடிய யானைகளைத் தாக்கி மடக்க நடந்தானே அந்த உக்கிர நடையும், அப்போது பாம்பின் படம் நிமிர்வதுபோல் பூரித்து நிமிர்ந்த தோள்களும் அப்படியே கண்முன் தோன்றுகின்றன.



அப்பேர்ப்பட்ட பராக்கிரமம் எல்லாம் அரக்கருக்கு இரையாகவுள்ள மனிதர்களிடத்தே ஒடுங்கிப் போய்விட்டதோ ?—என்று கதறுகிறாள்:

ஊனுடைய உடம்பினராய்
எங்குலத்தோர்க்(கு) உணவாய
மானுடவர் மருங்கேபுக்(கு)
ஒடுங்கினதோ வலியம்மா ?

[மருங்கே—இடத்தே. புக்கு—போய்.]

கரன் என்ற ராட்சஸ மூர்த்தி

இப்படி லங்கேச்வரனையும் அவன் தம்பிமாரையும் நினைத்துக் கதறியவளுக்கு அதே வனத்தில் தனக்கு உதவியாளாக ராவணனால் நியமிக்கப் பெற்றிருக்கும் கரனுடைய நினைவு வருகிறது. அவன் ராவணனுக்கும் சூர்ப்பணகைக்கும் தாயாரின் சகோதரி மகன்; சகோதர முறையிலிருப்பவன். இவள் இட்ட கட்டளைப்படி நடக்க வேண்டுமென்பது கரனுக்கு ராவணன் இட்ட கட்டளை. அந்தக் கரனுடைய வலிமைதான் கொஞ்சமோ? அவன் ஒருவனே மும்மூர்த்திகளுக்கும் சரிநிகர் சமானமாயிருக்கிறானும் :

மரன்ஏயும் நெடுங்கானில்
மறைந்துறையும் தாபதர்கள்
உரனேயோ, அடல்அரக்கர்
ஒய்வேயோ? உற்றெதிர்ந்தார்
'அரனேயோ, அயனேயோ,
அரியேயோ' எனும்ஆற்றல்—
கரனேயோ! யான்பட்ட
கையறவு காணுயோ ?

[மரன் ஏயும் – மரங்கள் நிறைந்த. மறைந்து உறையும் – ஒளித்து வசிக்கின்ற. உரனேயோ – வலிமையினாலேயோ. அடல் – வலிமை. உற்று எதிர்த்தார் – நேர்ந்து எதிரிட்டவர். கையறவு – துன்பம்.]

என்ற பிரலாபத்திலே அடுத்துவரும் 'கரன் வதைப் படல'த்திற்குத் தோற்றுவாய் காண்கிறோம்.

கரன் வந்து பழிக்குப் பழி வாங்கிய போதிலும், உலகத்திற்கே திலகமாய்த் திகழும் ராவண சபையில் இனி எப்படிப் பிரவேசிப்பது? 'மூக்கறையும் காதறையுமான அடியேன், அண்ணா! இனி உன் திவ்ய சமூகத்தில் எப்படி வந்து முகங் காட்டுவேன் ?' என்று அலறுகிறாள் :

இந்திரனும் மலரயனும்
இமையவரும் பணிகேட்பச்,
சுந்தரிபல் லாண்டிசைப்ப,
உலகேழும் தொழுதேத்தச்,
சந்திரன்போல் தனிக்குடைக்கீழ்
நீ இருக்கும் சபைநடுவே,
வந்தடியேன் நாணது
முகங்காட்ட வல்லேனே ?

[மலரயன் – பிரம்ம தேவன். பணி கேட்ப – உத்தரவு கேட்டு நிற்க. சுந்தரி – தேவ சுந்தரிகள் ; அழகிய தேவமாதர். பல்லாண்டு இசைப்ப – வாழ்த்துப் பாடல்களை இசையுடன் பாட. தனிக்குடை – ஏகாதிபத்தியத்திற்கு அறிகுறியான ஒற்றைக் குடை.]



252. எல்லாருக்கும் ஏக உறக்கமா?

‘என்னை அங்க பங்கம் செய்த மனிதன் வெற்றிச் செருக்கோடும் உத்ஸாகத்தோடும் தன் தோளைப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருக்கிறானே!’ என்று புலம்புகிறாள். ‘அப்படி அவன் தோள் பார்க்க நான் இப்படிக் கிடந்து புலம்புகிறேனே!’ என்று மேலும் புலம்புகிறாள்.

அண்ணா! ஓ!

இந்த அவமதிப்பு இவள் இருக்கும் வனத்தில் அல்லவா நேர்ந்திருக்கிறது? ஆம், இவள் ராணி போல் இருக்கும் வனம்; இவளுக்குக் கரன் படைத் துணையாக இருக்கும் வனம்; அண்ணனான ராவணேச்வரன் சுயேச்சையாகத் திரியும்படி இவளை விட்டு வைத்திருக்கும் வனம். இந்த நிலையில் புலம்பலுக்கும் அலறலுக்கும் கேட்பானேன்:

உரன்நெரிந்து விழ, என்னை
உதைத்துருட்டி மூக்கரிந்த
நரன்இருந்து தோள்பார்க்க,
நான்கிடந்து புலம்புவதோ?
கரன்இருந்த வனமன்றோ?
இவைபடவும் கடவேனோ?
அரன்இருந்த மலையெடுத்த
அண்ணா ஓ! அண்ணா ஓ!

[உரன் — வலிமை. நரன் — மனிதன். இவை — இப்பாடுகள். கடவேனோ — தகுதியாவேனோ. அரன் — சிவபெருமான்.]

‘புலம்புவதோ?’ என்று ஏங்கிப்போனவள் ‘அண்ணா ஓ! அண்ணா ஓ!’ என்று அலறும்போது, தன்னை இழிவு செய்த மனிதன் எந்தத் தோள் பார்த்து ஆனந்திக்கிறானோ, அந்தத் தோளை அப்படியே அறுத்து வீழ்த்தி

அழித்து ஒழிக்க வேண்டாமா ?— என்ற ஆங்காரம் ஏற்படுகிறது. 'அது தானே தன் அண்ணன் அந்த ஆசாமிக்குக் கற்பிக்கத் தக்க பாடம்?' என்ற ஆத்திரமும் ஏற்படுகிறது.

ராவணு, ஓ! ராவணு, ஓ!

தனக்கு நேர்ந்த பழி அண்ணனுக்கும் பழிதானே? கைலையைக் குலுக்கித் திசை யானைகளைக் கதி கலங்கச் செய்த வீரத் தோள்களுக்கே சூடுபோட்டது போல், அந்த வீரப் புகழுக்கே மாசு ஏற்றியது போல் அல்லவா இந்தப் பழி நேர்ந்திருக்கிறது? 'அந்த இசையெல்லாம் வசையாகி விட்டதே!' என்று அது குறித்தே புலம்புவதுபோல் புலம்புகிருள் ஒரு சமயம்:

நசையாலே மூக்கிழந்து
 நாணமிலா நான்பட்ட
வசையாலே, நினதுபுகழ்
 மாசுண்ட தாகாதோ?
திசையானை விசைகலங்கச்
 செருச்செய்து மருப்பொசித்த
இசையாலே நிறைந்தபுயத்(து)
 இராவணஓ! இராவணஓ!

[நசை - ஆசை. மாசு - களங்கம். விசை கலங்க - வேகம் அடங்க, செரு — போர். மருப்பு - தந்தங்கள்.]

'ஆசையாலே மூக்கிழந்தேன்' என்கிருளே, இவள் மனிதனுகிய ராமன் மீது ஆசைகொண்டது ராவண குலத்திற்கு வசையல்லவா? 'எம் குலத்தோருக்கு உணவாய மானுடவர்' என்று சில விநாடிகளுக்கு முன்பு தானே புலம்பினுள்? அப்படியிருக்க, இவள் தன் குற்றத்தைத் தன் குலத்தினரிடம் ஒப்புக்கொள்வாளா? இந்தப் பொய்மகளுக்கும் உண்மைக் கும் என்ன தொடர்பு? இப்படியெல்லாம் வாசகர்கள் சிந்திக்கக்கூடும்.

சரி; எடுத்த எடுப்பில் 'நசையாலே மூக்கிழந்து' என்று கூச்சலிடும் போது தன் ஆசையைத் தான் குறிப்பிடுகிருள். ஆனல் ராமன் மேலுள்ள அந்த ஆசையை அல்ல; ராவணன் மேலுள்ள ஆசையைத்தான், — ராவ ணன் பொருட்டாகச் சீதையை எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்ற அந்த ஆசையைத்தான். அப்படியானல், உண்மையில் இவளுக்கு அப்படி ஓர் ஆசை இருந்ததா? இல்லை, இல்லவே இல்லை என்று சொல்லிவிடலாம். இது கற்பனை - ஆசைதான். ராவணனிடம் தனது அங்க பங்கத்திற்கு உரிய காரணம் இன்னதென்று பின்னல் சொல்லவேண் டியிருக்குமே — அந்தத் துறையில் சூர்ப்பணகையின் மூளை இப்போதே சுறுசுறுப்பாகி விட்டது.

ஓ, மருமகனே! ஓ!

கடைசியாக ராவண ஏகாதிபத்தியத்தின் உயிர் நிலையாக இருக்கும் இந்திரஜித்தின் நினைவு வருகிறது. தேவ ராஜாவை விலங்கு பூட்டிச் சிறை யில்தள்ளிய மருமகனை நினைத்துப் பாராமல் இருக்க முடியுமா?



கானம்அதின் இடைஇருவர்
காதொடுமூக் குடன்அரிய,
மானமதால் பாவியேன்
இவன்மடியக் கடவேனோ?
தானவரைக் கருவறுத்துச்
சதமகனைத் தளையிலிட்டு
வானவரைப் பணிகொண்ட
மருகா,ஓ! மருகா,ஓ!

[கானம் அதின் இடை - காட்டிலே. இவண் - இந்த இடத்தில். தானவர் - அசுரர். சதமகன்—இந்திரன். தளை - விலங்கு.]

என்று பிரலாபிக்கிறாள்.

ராவண விஜயத்தைப் போல் இந்திரஜித் — விஜயமும் மண்ணெலாம் கவர்ந்து விண்ணிலும் வியாபித்து விட்டதாம். தேவராஜாவைச் சிறைப்படுத்தித் தேவர்களை அடிமையாக்கிக் கொண்ட அந்த வெற்றிச் சிகரத்தை ஏறி மிதிப்பதற்கு முன், இந்திரஜித்து மண்ணுலகில் எட்டுத் திக்கும் முட்டிய கோபத்துடன் வில்லுங்கையுமாய், எங்கும் தானாய்த் திரிந்து, போன விடமெல்லாம் துவைத்து நாச வேலைகளைச் செய்தவண்ணமாயிருந்தானாம். அப்படியும் கோப வெறியும் போர் வெறியும் அடங்காமல் தான் இந்திர லோகத்தையும் ஒரு கலக்குக் கலக்கி அந்த இந்திரனுக்கும் இரு காலிலும் பெரு விலங்கு பூட்டி வைத்தானாம்:

ஒருகாலத்(து) உலகேழும்
உருத்(து)எரியத், தனுவொன்றால்
திருகாத சினம்திருகித்
திசையனைத்தும் செலநூறி,

இருகாலில் புரந்தரனை
இருஞ்சிறையின் இடுவித்த
மருகா,ஓ! மானிடவர்
வலிகாண வாராயோ?

[உருத்து எரிய — மிகுதியாய்ப் பற்றி எரியும்படி. தனு — வில். திருகாத சினம் திருகி — அப்படி அதற்கு முன் ஒருபோதும் முறுகி எழாத கோபம் முற்றி முறுகி முதிர்ந்தெழ. செல நூறி — முற்ற அழித்து. புரந்தரன் — இந்திரன். இருஞ்சிறை — (இங்கே) கொடிய சிறை. வலி — வலிமை.]

இந்திரஜித்தின் திக்விஜயம் நாம் மறக்க முடியாதபடி வருணிக்கப் பட்டிருக்கிறது இப்பாட்டிலே. தைமூர் என்ற தாமர்லேனைச் சரித்திரப் பிரசித்தி பெற்ற அரக்க வீரன் என்று சொல்லலாம். அவன் திக்விஜயம் செய்துகொண்டு போன வழியைக் குறித்து ஒரு சரித்திர ஆசிரியர், 'எங் கெங்கே தீ எரிந்து கொண்டிருக்கிறதோ, இரத்தம் சிந்திக்கிடக்கிறதோ, அங்கெல்லாம் அவன் போனவழி தான்!' என்று அடையாளம் காட்டு கிறார். இந்திரஜித் போனவழி குறித்தும் சூர்ப்பணகை, 'பற்றி எரியும் நெருப்பும் சர்வ நாசமுமே அந்த வெற்றிப் பெருவழி!' என்று காட்டு கிறாள்.


ஒரே கும்பகர்ண உபாசனையா?

இப்படியெல்லாம் பதறிக் கதறி அலறிப் பார்த்தும், ஏனென்று கேட்பாரில்லை. எப்படிக் கேட்டிருக்கும் அந்தக் காதுகளில் இந்தக் கூச் சல்கள்? ஆனால் அப்படி அமர ஆலோசிக்கும் நிலையில்தான் சூர்ப்ப ணகை இல்லையே! திடீரென்று கோபத்தோடு பரிகாசம் கலந்த குர லில், 'அரக்கர்குல அவதாரங்களே! காது கேட்கவில்லையா? அண்ண னை கும்பகர்ணனைப் போல நீங்களெல்லாரும் ஒரே உறக்கமாய் உறங்கு கிறீர்களா?' என்று அலறுகிறாள்:

கல்ஈரும் படைத்தடக்கை
அடற்கரதூ டணர்முதலா
அல்ஈரும் சுடர்மணிப்பூண்
அரக்கர்குலத்(து) அவதரித்தீர்!
கொல்ஈரும் படைக்கும்ப
கருணனைப்போல், கொடியீர்காள்!
எல்லிரும் உறங்குதிரோ?
யான்அழைத்தல் கேளீரோ?

[ஈரும் - பிளக்க வல்ல. படை - ஆயுதம். அடல் - வலிமை. கர தூடணர் - கரனும் தூஷணன் என்ற அசுரனும்; முதலா - முதலாக. அல் - இருட்டு. சுடர்மணிப் பூண் - சுடர்வீசும் இரத்தின மயமான நகைகள். கொல் ஈரும் படை - கொல்லன் அராவிக் கூர்மை செய்த ஆயுதங்கள்.]

இப்படி அலறி ஓய்ந்துபோகும் சூர்ப்பணகையின் பிரலாபச் செய்யுள் களில், அருகேயுள்ள கரனை இந்த அரக்கியின் சேனாதிபதியான தூஷண னையும் அறிமுகப்படுத்துகிறான் கவிஞன். இருவரும் விரைவில் ராமனு டன் சண்டைக்கு வரப்போகிறார்கள். இவர்களோடு, அரக்கர் குலப் பெருந் தலைவர்களான தந்தையும் மகனும் அறிமுகமாகிறார்கள். ஏன், நெடுந் தூக்கத்திலே கிடக்கும் அந்தக் கும்பகர்ணனும் நமக்கு அறிமுகம் செய் யப்படுகிறானே, அந்தச் சாதுரியத்தைத் தான் என்னென்பது?



253. அன்பிழைத்தல் வன்பிழையா?

அரக்கியின் உள்ளத்தில் காதல் மறைந்து பகைமையுணர்ச்சி மேலோங்கி விட்டது. 'பழிக்குப் பழிவாங்க வேண்டும்' என்பதே இப்போது இவள் சித்தம். இந்தச் சித்தம் விரைவாக மாறுதல் அடையக்கூடுமென்று நாம் எண்ண முடியுமா? ஆனால் அரக்கி இப்படி அழுது புலம்பித் தரையில் புரண்டு கொண்டிருக்கும் போதே இவளுடைய மன மாற்றத்திற்குக் காரணமான ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதைக் காண்கிறோம்.

அற்புதமாக ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை; விளைவுதான் அற்புதம். ராமன் வருகிறான்; அரக்கியைப் பார்க்கிறான் — அவ்வளவு தான். சாதாரண நிகழ்ச்சி; கோபத்தையும் பகைமையையும் மேலும் தூண்டக்கூடியது தான். கம்பன் கதையில் லட்சுமணன் இவளை இவ்வளவு கொடுமையாகத் தண்டிக்கும்போது ராமன் தலத்தில் இல்லைதான்; எனினும் அரக்கிக்குத் தம்பி மேலுள்ள கடுங்கோபம் ராமனையும் தொலைத்துவிட வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தது. இவ்வளவு கஷ்டத்திற்கும் இவன் மனம் கல்லாய் இருந்தது தானே காரணம்? இந்நிலைமையில், 'உன்னை விரைவில் ஒழித்து விடுவார்கள் என்னைச் சேர்ந்தவர்கள்' என்று சூர்ப்பணகை ராமனைப் பயமுறுத்துவாள் என்று எதிர் பார்க்கவும் கூடுமே. ஆனால் நடந்ததென்ன?

"மலை வந்தான்!"

அந்த ஆனந்தமான காலை வேளையிலே பஞ்சவடிச் சாலையை நோக்கி வில்லுங்கையுமாக நடந்து வருகிறான் ராமன். நீராடி ஜபம் செய்து விசேஷ மன அமைதியோடும் முக மலர்ச்சியோடும் வருகின்ற ஆனந்த புருஷன் — அந்த அழகன் — முன்னிலும் அழகு பெற்று வருவதுபோலக் காண்கிறான். இளஞ் சூரியனின் பொன்னிறக் கதிர்களிலே மரகதமலை மூழ்கிக் களித்து வருவது போல் எதிரொளி வீசி வருகிறான்.

காலை இளவெயிலில்
காண்பதெலாம் இன்பமன்றோ ?

என்றார் புதுமைக்கவி பாரதியார். மகாகவிகளுக்கெல்லாம் மகாகவியான கம்பனோ, அந்தக் காலை இளவெயிலில் மரகதமலைபோல வந்த ராமனைக் கண்டதும் சூர்ப்பணகைக்குக் காதல் மறுபடியும் பொங்கிப் பகைமையுணர்ச்சியை மூழ்கடிக்கிறது என்று காட்டுகிறான். 'என்ன அதிசயம்! அது எப்படி?' என்று கேட்டால், 'கதையைக் காட்டிலும் உண்மை அதிசயமானது!' என்று சொல்லிக் கதை சொல்லுகிறான்! மகாகவி ரவீந்திரர் சொல்லுகிறபடி, கவிஞன் சொல்வது தானே உண்மை?

அந்த உண்மையைக் கவிஞன் காட்ட நாமும் காண்போம்.

என்றின்ன பலபன்னி
இகல்அரக்கி அழுதிரங்கிப்
பொன்துன்னும் படியகத்துப்
புரள்கின்ற பொழுதகத்து,
நின்றந்த நதியகத்து
நிறைதவத்தின் குறைமுடித்து,
வன்றிண்கைச் சிலைநெடுந்தோள்
மரகதத்தின் மலைவந்தான்.

[இன்ன - இப்படிப்பட்ட. பன்னி — அடுத்தடுத்துச் சொல்லி. இகல்— பகைமை. இரங்கி - சோகமடைந்து. பொன் துன்னும் — பொன்மயமாயிருப்பது போலத் தோன்றி. படிஅகத்து - பூமியினிடத்தில். பொழுதகத்து- பொழுதிலே. அந்த நதி - அந்தக் கோதாவரி. நிறை தவம்-நிரம்பிய காலைத் தவமாகிய நித்தியகர்ம வழிபாடு. வல் திண்கைச் சிலை - மிக வலிய கையில் பிடித்த வில்.]

ராமன் காலைவழிபாடு செய்ததால் அந்த வழிபாடாகிய நிறை தவத்தின் குறை முடிந்ததுபோலத் தோன்றுகிறது கவிஞனுக்கு. ஜபம் செய்யும் போதும் வில் இருந்தது. துஷ்ட அரக்கர்களும் துஷ்ட மிருகங்களும் நிறைந்த காடல்லவா?

ராமனது வீர பரம்பரையினரென்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் உதயபுரி மகாராணா என்ற ராஜபுத்திர அரசர் மகாதேவனுக்குப் பிரார்த்தனை செய்யும்போதும் உருவிய கத்தியுடன் இருப்பாராம்.

அப்படித் தவம் முடித்துச் சாந்தி பரிமளிக்கும் முகத்துடன் வரும் போது, அந்த மரகதமேனியனுக்கு அந்தச் சிலையும் ஆயுதமாகத் தோன்றாமல் அந்த நெடுந்தோளில் ஓர் ஆபரணம்போல் தோன்றுகிறதாம். காலை இளவெயிலில், காதலன் மீது காண்பதெலாம் ஆபரணம் தானே?

வன்றிண்கைச் சிலைநெடுந்தோள்
மரகதத்தின் மலை

வந்ததும், அந்த அழகு அப்படியே வசீகரிக்கிறது சூர்ப்பணகையை,— பேதையைப் பேதைமைப் படுத்துகிறது.

'எதிர் விழுந்தாள்'

புத்தர்பெருமானின் ஞான ஒளி வீசிய முகத்தைக் குறித்துக் கவிமணி தேசிக விநாயகம்,

வந்தவர் போனவர்
கண்களுக்கும் – அந்த
வள்ளல் முகம்விருந்(து)
ஆனதம்மா !

என்று பாடுகிறார். புத்தர்முகம் விருந்தென்றால், ராமன்முகம் சூர்ப்பணகையின் புண்களுக்கெல்லாம் அரு மருந்துபோலக் காண்கிறதாம்—மனம் புண்ணுக்கும்தான் ! இது கம்பன் குறிப்பு:

வந்தானை முகம்நோக்கி,
வயிறலைத்து, மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு
செழுநிலத்தைச் சேறாக்கி,
'அந்தோ ! உன் திருமேனிக்(கு)
அன்பிழைத்த வன்பிழையால்,
எந்தாய் ! யான் பட்டபடி
இதுகாண்' என்(று) எதிர்விழுந்தாள்.

[வயிறு அலைத்து - வயிற்றில் அடித்துக் கொண்டு. குருதி - இரத்தம். வன்பிழை - கொடிய குற்றம். எந்தாய் - என் தலைவனே. படி-நிலைமை.]

அரக்கியின் புண்களிலிருந்து செந்நீரும், கண்களிலிருந்து வெந்நீர் மழை போலக் கண்ணீரும் தாரை தாரையாய்ப் பெருகிச் செழுநிலத்தைச் சேறாக்குவது போலத் தோன்றுகிறதாம். என்ன துயரம் ! என்ன குறை ! என்ன முறையீடு !

அந்த முகத்தைப் பார்த்ததும் அகத்திலே பகைமைக்கு இடம் ஏது? சுடு சினத்திற்கும் கடுஞ் சொல்லுக்கும் தான் இடம் எங்கே? பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்த அரக்கி பழைய காமவல்லி ஆகிவிடுகிறாள் !

தோற்றத்தில் அரக்கியாகத்தான் இருக்கிறாள் — ஆம், சீதையைப் பய



முறுத்திக் கவர்ந்து செல்லவந்த அதே கோர அரக்கிதான். இளையவன் கொடுமை கோரத்தை மகாகோரமாக்கி விட்டது. இந்த நிலையையும் நினைத்துப் பாராமல் ராமனோடு கொஞ்சிப் பேசுகிறாள் :

'அந்தோ! உன் திருமேனிக்(கு)
அன்பிழைத்த வன்பிழையால்,
எந்தாய்! யான் பட்டபடி
இதுகாண்' என்(று)

பேசித் தன்மேல் இரக்கம் உண்டாகவேண்டுமென்றும், தான் அவனுக்காகச் செய்த தியாகத்தை அவன் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் ஆசைப்படுகிறாள்.

வயிற்றில் அடித்துக்கொண்டு செந்தாரையாகப் பெருகும் இரத்தத்தோடு கண்ணீரை மேலும் தாரை தாரையாகப் பெருக்கிய வண்ணம், 'ஐயோ! அன்பு செய்வதும் பிழை செய்வதாகுமா? மேலும் அது யார் குற்றம்? இந்த அழகிய மேனியின் குற்றம் தானே!' என்கிறாள்.

'என்ன விபரீதம்! இத்தகைய திருமேனிக்கு அன்பு இழைப்பது பிழையாகிறது, கொடிய பிழையும் ஆகிறது!' என்கிறாள்.

இவ்விதமாகப் பேசும் சூர்ப்பணகை, 'அந்தப் பிழைக்காக நான் பட்ட பாடு இது!' என்று ராமன் எதிரே விழுகிறாள்.

என்ன காதல்! என்ன மறதி!

எவ்வளவு நாடகத் திறமையோடு சித்திரிக்கப்படுகிறது இக்காட்சி! காதல் படும் பாட்டையும், படுத்தும் பாட்டையும் கம்பன் பாட்டு எப்படியெல்லாம் வெளியிடத் துணிகிறது பாருங்கள்! தனக்குக் கிடைத்த கொடிய தண்டனையைக் காதலனுக்காகத் தான் செய்த மகத்தான தியாகமென்று காட்டும் மனநிலையைத் தான் என்னென்பது?

இவ்வளவு காதல் - பேச்சுக்கிடையே இப்போதுள்ள இந்த நிஜ உருவத்தில் (அரக்கி உருவத்தில்) தன்னை ராமன் தெரிந்து கொள்வானா? — என்பதை நினைத்துப் பார்க்கத்தான் அவகாசம் ஏது?

இப்படிக் காதலால் வெதும்பிய உள்ளத்தோடும், விரித்த கூந்தலோடும் தன் முன்னே வந்து விழுந்து முறையிட்ட அரக்கியை ராமன் நோக்குகிறான். 'அம்மா! நீ யார்?' என்று கேட்கிறான். அவளோ, 'இவ்வளவு மறதியா? என்னைத் தெரியவில்லையோ?' என்று கேட்கிறாள்.



சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

அரக்கியின் காதல்

254. தண்டனை நியாயமா?

'இப்படி ஏன் தலைவிரி கோலமாய்க் கதறிக் கொண்டிருந்தாள்? என்ன கோர ரூபம்! இதை இவ்வளவு குரூப மாக்கியது யார்? ஓஹோ, அப்படியும் இருக்கலாம். இந்தக் கோர ரூபம் ஏதோ கோரமான காரியம் செய்திருக்க வேண்டும்; அதற்காகத் தம்பி—கோபக்காரன்—இவ்வளவு குரூரமாகத் தண்டித்திருக்கவும் கூடும்' என்று ஊகித்துக் கொண்டே ராமன், 'அம்மா நீ யார்?' என்று கேட்டான். 'அறியாயோ நீ என்னை?' என்று ஆச்சரியமாகச் சூர்ப்பணகையும் ஒரு பதில் கேள்வி போடுகிறாள்.

ராவண கோபமும் பிரதாபமும்

இந்தப் பதில் கேள்வியைத் தொடர்ந்து, 'உலகங்களுக் கெல்லாம் ஒரு முதலாளியாகிய பிரதாப ராவணேசுவரனுக்குத் தங்கை யல்லவா நான்?' என்று பெருமிதம் தோன்றப் பேசித் தான் முந்தி வந்தவளே என்பதை உய்த்துணர வைக்கிறாள்:

அவ்வுரைகேட்(டு) அடல்அரக்கி,
'அறியாயோ நீ என்னை?
தெவ்வுரையென்(று) ஒருலகும்
இல்லாத சீற்றத்தான்,
வெவ்விலைவேல் இராவணனும்
விண்ணுலகம் முதலாக
எவ்வுலகும் உடையானுக்(கு)
உடன்பிறந்தேன் யான்' என்றாள்.

[அடல் அரக்கி – கொடிய அரக்கி. தெவ் உரை என்று – பகைமையாகிய பேச்சு என்று. வெவ்விலை வேல் – இலை வடிவமாகச் செய்த கொடிய வேலாயுதம்.]

வந்த காரியம்

சூர்ப்பணகை ஊகித்தபடி ராமன் உய்த்தறிந்து கொள்ளவில்லை. 'பகை என்ற பேச்சே இல்லை. அதனால் திருப்தியா? அதற்காகவும் சீறிக்

கொண்டு தான் இருக்கிறாள். ஆம், சீற்றத்திற்கு இலக்காவார் இல்லையே என்ற சீற்றம்!' என்பதைக் குறிப்பாக உணர்த்தியும், உணர்ந்து கொண்டானில்லை.

உருவ வேற்றுமை கொண்டே 'இவள் ராட்சஸ சக்கிரவர்த்தியின் வேறொரு தங்கையாக இருப்பாள்' என்று கூட எண்ணியிருக்க வேண்டும். 'காமவல்லி அழகுத் தங்கையென்றால் இந்த கோரவல்லி அசல் ராட்சஸ அச்சிலே உள்ள அருமைத் தங்கை' என்று யூகித்திருக்கலாம். ராமன் புதிதாகக் கேட்டதைப் பாருங்கள்: 'அப்படியானால் உம்முடைய இனத்தார் பெருஞ்சிறப்போடு வசிக்கும் இராஜதானியை விட்டு நெடுந் தூரத்திலுள்ள ஆசிரம தவவனத்திற்கு நீர் வந்த காரியம் என்ன?' என்று குறிப்பை அறியத் தவறிவிட்ட புருஷ ரத்தினத்தோடு கொஞ்சிக் குலாவும் ஸ்திரீ ரத்தினத்தைப் பாருங்கள்.

'வேம் இருந்தை எனக்கனலும்
வெங்காம வெம்பிணிக்கு
மாமருந்தே! நெருநலினும்
வந்திலெனோ யான்!' என்றாள்

[வேம் இருந்தை — (நெருப்பினால்) வேகின்ற கரி. நெருநல் — நேற்று. வந்திலெனோ — வந்தேன் இல்லையோ.]

'நேற்று வந்தவளே நான்' என்பதைத்தான் எவ்வளவு உருக்கமாய்ப் பரிதாபமாய்ப் பேசுகிறாள். 'அதற்குள்ளே இந்த மறதியா!' என்றும் குறிப்பாய்க் கொஞ்சுகிறது நெஞ்சு.

வெங்காம வெம்பிணிக்கு
மாமருந்தே!

என்று ராமனை வாயார அழைப்பதில் இவள் தன் நெஞ்சை, இன்பக் கொழுங்கனலாகிய காமத்திலே வெந்து கொண்டிருக்கும் அந்த நிலையில் அப்படியே காட்டுகிறாள் காதலனுக்கு.

'நேற்று வந்ததில்லையோ?' என்று சொன்னவளை நோக்கி, 'நேற்று வந்த கட்டழகியோ நீர்?' என்று அதிசயமாய்க் கேட்கிறான். அதற்கு உடனே அவள், 'ஆம் ஐயா! இப்படிச் செய்து விட்டால் எப்பேர்ப்பட்ட அழகிக்கும் அழகு அழிந்து போகாதோ?' என்று கொஞ்சும் குரலிலேயே பதில் சொல்லுகிறாள்.

ஏன் இந்த ஆத்திரம்?

குரூபமாயிருக்கும் அந்த நிலையிலும் அவ்விதமாகப் பேசியது ராமனுக்கும் சிரிப்பை உண்டாக்கி விட்டது. எனினும், சிரிப்பை அடக்கிக்கொண்டு பரகன் சிறிது விளங்க இளநகையரும்பிய வண்ணம் தம்பியைப் பார்த்து, 'வீர! நீ ஆத்திரப்பட்டு இப்படிச் செய்ததற்கு இவள் செய்த குற்றம் தான் என்ன?' என்று கேட்டான். 'விரைந்தனை!' — அதாவது, 'ஆத்திரப்பட்டாய்!' — என்று சொல்லும் ராமன் தம்பியை இங்கே 'வீர!' என்று அழைப்பதில் கூட ஏதோ கொஞ்சம் பரிகாசம் தொனிக்கிறதா, என்ன?

லட்சுமணன் கட்சி

உடனே லட்சுமணன் ராமனை அடிவணங்கி தன் கட்சியைச் சொல்லுகிறான். அந்தக் கட்சியை லட்சுமணன் வாக்கு மூலமாகவே — அதைக் கவிஞன் பதிவு செய்து காட்டுகிறபடியே — நாமும் காண்போம்:

'தேட்டம்தான்
  வாள்எயிற்றின்
தின்னவோ?
  தீவினையோர்
கூட்டம்தான்
  புறத்துளதோ?
குறித்தபொருள்
  அறிந்திலனால்!
நாட்டம்தான்
  எரிஉமிழ
நல்லாள்மேல்
  பொல்லாதாள்
ஓட்டந்தாள்,
  அரிதின் இவள்
உடன்(று) எழுந்தாள்'
  எனஉரைத்தான்.

[தேட்டம் — தேடுதல்; தேடி வந்தது. வாள் எயிற்றின் — கூர்மையான கொடியபற்களால். புறத்து உளதோ — பின்னே இருக்கிறதோ குறித்த பொருள் — (அரக்கி) உத்தேசித்த கருத்து. நாட்டம் — கண்கள். எரி—நெருப்பு. ஓட்டந்தாள் — ஓடி வந்தாள். அரிதின்—(பிறருக்கு) அருமையான ரீதியில். உடன்று — கோபித்து.]

சூர்ப்பணகை சீதை மீது பாய்ந்த விடியற்காலத்தில் அருகேயிருந்த இருண்ட சோலையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த லட்சும



ணன், அரக்கி மீது விழுந்த அரைகுறை வெளிச்சத்திலே அந்தக் கூர்மையான கோரப் பற்களையும் பார்த்து விட்டானும். அதற்கு முன் லட்சுமணன் நரமாமிச பட்சணியான தாடகையைப் பார்த்திருக்கிறான். அவளுடைய 'பேத்தி'யான சூர்ப்பணகையின் நிஜ உருவிலும் அந்தப் பழைய கோர பயங்கரத்தைக் கண்ணாலும் மனோபாவத்தாலும் கண்டிருக்க வேண்டும். அந்தப் பயங்கரமான பற்கள் ராட்சஸப் பசியையும் நினைப்பூட்டி யிருக்க வேண்டும். அதனால் தான்,

தேட்டம்தான் வாள்எயிற்றின்
தின்னவோ ?

என்று திடுக்கிட்டானும்.

உடனே வேறொரு ஆலோசனையும் தோன்றியது. 'ஒருவேளை அரக்கர்கள் கூட்டமாக வந்திருக்கக் கூடும்; ஒரு படையெடுப்பாக இந்தத் தவனத்திற்கு வந்திருக்கவும் கூடும். அப்படி வந்தவர்கள் பின்னே தங்கி இவளை முன்னே வேவு பார்க்கவோ, இரை தேடவோ அனுப்பியிருக்கக் கூடும். அரக்கியின் நோக்கம் திட்டமாய்த் தெரிய வில்லை. 'ஏதோ ஒரு பயங்கரச் செயலைச் செய்யப் போகிறான்' என்று மட்டும் தோன்றி விட்டது, அந்த வாள் போன்ற பற்களையும், எரி உமிழும் கண்களையும் அந்த மங்கலான வெளிச்சத்திலே பார்த்து விட்டதும். அரக்கி ஓடிப் பாய்ந்து வந்ததே ஏதோ ஒரு ராட்சஸப் பாம்பு சீறி வந்தது போலத் தோன்றியது என்பது குறிப்பு.

கட்சி சரியா ?

பதறாத லட்சுமணனும் பதறினான். என் நடுங்கினான்; – எல்லாம் சீதைபொருட்டே — நடுங்காத கைகள் கூசாமல் மிகக்கொடிய தண்டனையை விதித்து விட்டன. இதுதான் இளையவன் கட்சி. தம்பி பொய் சொல்லமாட்டான், அவனுக்குப் பொய் சொல்லத் தெரியாது என்பது ராமனுக்குத் தெரியும். லட்சுமணன் காட்டிய காரணங்களை ராமன் ஒப்புக் கொண்டு தான் இருக்கவேண்டும். ஆனால் கொலையினும் கொடிய இத் தண்டனையையும் ராமனது அருள் நிறைந்த நெஞ்சம் அப்படியே ஒப்புக் கொண்டது என்று கருதுவது கஷ்டம்தான்.

கம்பனுக்கும் இது கஷ்டமாகவே இருந்திருக்கும். ஆதி ராமாயண மூலத்திலிருந்து தன் கொள்கைக்கு இசைந்த முறையில் சில மாறுதல்கள் செய்து கொண்டவனல்லவா? இந்த நிலையில் கம்ப – ராமன் லட்சுமணனுக்கு என்ன பதில் சொல்லியிருக்கக்கூடும்? இதை ஊகிப்பதும் கஷ்டம் தான். ஆகவே, இத்தகைய ஒரு சந்தர்ப்பத்திற்கே இடமில்லாமல் கதையைச் சாதுரியமாக நடத்திக் கொண்டு போகிறான் கவிஞன்.

லட்சுமணன் கட்சி பேசியதும் ராமன் பதில் சொல்வதற்கு முன்பே சூர்ப்பணகை அசட்டுத்தனமாய்ப் பேச ஆரம்பித்து விடுகிறான்; லட்சுமணன் கட்சியை ஆட்சேபிக்கவே இல்லை. இந்த அதிசயமான அசட்டுத்தனத்தை அடுத்த வாரம் பார்க்கலாம்.



சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

அரக்கியின் காதல்

255. அரக்கி சொன்ன கதை

லட்சுமணன் குற்றப் பத்திரிகை படித்ததும், 'நான் குற்றவாளியல்ல; அபாண்டமான பழி' என்று சூர்ப்பணகை சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக ஒரு தவளைக் கதை சொல்லத் தொடங்குகிறாள். இல்லை, ஒரு குளத்திலே இரண்டு தவளைகள் — என்று இரு தவளைக் கதை சொல்லுகிறாள். அந்தத் 'தவளைக் காதலர்க'ளில், பெண் தவளை கருவுற்றிருக்கிறது. ஆண் தவளை அருகே சேற்றில் தத்தி விளையாடிக் கொண்டிருக்கிறது. பெண் தவளை பார்த்துக் கொண்டிருக்கிறது, அமைதியாக அந்த விளையாட்டை. ஆனால் திடீரென்று 'ஸ்ரீமதி' தண்ணீரை அப்படிக் கலக்கியடிப்பதற்குக் காரணம் என்ன? கோபம் வந்துவிட்டதாம் அப்படி அதற்கு. அமைதி இழந்து சினம் கொண்டதற்குக் காரணம்? ஸ்ரீமான் தவளையாருக்கு அருகே அந்தச் சேற்றில் ஒரு சங்குப் பெண் (பெண் சங்குதான்) காணப்படுகிறது. 'இந்தப் பொறாமை தான் அந்தச் சினத்திற்கும் ஆர்ப்பாட்டத்திற்கும் காரணம்' என்பதை உய்த்துணர வைத்துக் கதையை முடிக்கிறாள் சூர்ப்பணகை.

தவளையாகும் காமவல்லி

இப்படிக் கதை சொன்ன பிறகு, லட்சுமணனுடைய குற்றச் சாட்டுக்கு இரத்தினச் சுருக்கமாக,

'மாற்றவளைக் கண்டக்கால்
அழலாதோ மனம்?'

[மாற்றவள் — சக்களத்தி.]

என்று பதில் சொல்லி விடுகிறாள்.

நாட்டம்தான் எரிஉமிழ

[நாட்டம் — கண்கள்.]

என்று லட்சுமணன் சொன்னதைக் கூட இவள் அப்படியே ஒப்புக்கொண்டு, கண்கள் உமிழ்ந்த அந்த அழல் மனத்திலே தோன்றிய அழல் தான் என்று மனோ தத்துவ சாஸ்திரமும் பேசுகிறாள். என் கண்கள் அழல் உமிழ்ந்ததையும் உற்று நோக்கிய இளையவன்,—புத்தியிலும் இளைத்தவன்தான் போலும்

— அந்த அழல் உள்ளத்திலே பிறந்தது தான், பொறாமை—அழல் தான் என்பதை ஊகித்தானில்லையே!' என்பது குறிப்பு. சுருங்கச் சொன்னால், 'எல்லாம் சக்களத்திக் காய்ச்சல்' தான்.

இந்த விஷயத்தை வசிகரமாய் விளங்க வைக்கத்தான் தவளைக் கதை! சரி, கதையைத் தான் எவ்வளவு ரஸமாகச் சொல்லுகிறாள் ரஸிகை! தலைவன் தோன்றிய நாட்டின் இயற்கை வளத்திலும் ஈடுபட்டு இன்பம் காணும் தலைவி போல், கவிஞன் போல், அந்த இயற்கையோடு இசைந்து பாடுகிறாள்:

ஏற்றவளை வரிசிலையோன்
　　இயம்பாமுன், இகல்அரக்கி
'சேற்றவளை தன்கணவன்
　　அருகிருப்பச் சினம்திருகிச்
சூல் - தவளை நீர்உழக்கும்
　　துறைகெழுநீர் வளநாடா!
மாற்றவளைக் கண்டக்கால்
　　அழலாதோ? மனம்' என்றாள்.

[ஏற்ற — ஏந்திய. வளை — வளைந்த. வரி சிலை — கட்டமைந்த வில். சிலையோன் — (இங்கே) லட்சுமணன். இயம்பாமுன்—சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கு முன்பே. இகல் அரக்கி — கொடிய சூர்ப்பணகை. சேற்ற வளை — சேற்றிலுள்ள (பெண்) சங்கு. சினம் திருகி — சினம் முறுகி முதிர்ந்து. சூல் தவளை — கருக் கொண்டிருக்கும் பெண் தவளை. உழக்கும் — கலக்குகிற. கெழு — பொருந்திய.]

மண்டூக ரஸிகை

'கண்கள் எரி உமிழ நல்லாள் மேல் பொல்லாதாள் ஓடினாள் பெருங் கோபத்துடன்...' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே — 'சொல்லி முடித்தானோ, இல்லையோ?' என்ற நிலையில்—ஒரே ஆத்திரமாய்த் தன் தவளைக் கதையைச் சொல்ல ஆரம்பித்துவிட்டாள். 'தன் கணவன் அருகே தற்செயலாக ஒரு சங்குப் பெண்ணைக் கண்டும் ஆற்றாது சினம் திருகிச் சூல்-தவளை நீரைக் கலக்கும் நீர்நிலைகளோடு கூடிய வளம் நிறைந்த நாட்டின் வள்ளலே! மாற்றாளைக் கண்டால் மனம் எரியாதோ? இது மாதர் இயல்புதானே, அறியாயோ?' என்று முடிக்கிறாள். முடித்து, வள்ளலின் வண்மையை எதிர்பார்க்கிறாள், குறிப்பாக வேண்டுகிறாள். இத்தகைய வளநாட்டில் தோன்றிய வள்ளல் காதலின் சுவையை நன்கு அறிந்த ரஸிகனாகவும் இருக்கவேண்டுமே!—என்பதும் குறிப்பு.

சந்தர்ப்பத்தற்கு இசைந்தவாறு நாட்டுவளம் பாடும் ஒரு பழைய கவி சம்பிரதாயத்தைக் கவிஞன் எவ்வளவு சாதுரியமாகவும் ஹாஸ்யமாகவும், பாடப் பாட இசையின்பம் விளைக்கும் முறையிலும் கையாண்டிருக்கிறான் பாருங்கள்! தலைவனை நெஞ்சாரக் காதலித்த ஒரு புலவனின் வாக்கிலே விளைந்ததோர் அருங்கவிபோல் விளைந்துவிட்டது இப்பாட்டு. இது குறித்துப் புலவரும் ரஸிகருமான ஒருவர், 'அரக்கியின் வாயிலாகக் கம்பர் அருளிய அருங்கவி எண்ணுந்தோறும் எல்லையற்ற இன்பம் விளைப்பதாகும்' என்பர். அப்படிப் பைத்தியமாக அடிக்கக் கூடியதுதான், இந்த மண்டூக ரஸிகையின் காதற் பைத்தியத்திற்கு இப்படியும் ஓர் உருவம் கொடுத்துக் காட்டும் இப்பாட்டு. அவ்வளவு ரஸமாகப் புலவர் காதுகளில் ஒலி செய்யக் கூடியதுதான்.

இவள் 'பெருங்குலம்'

ஆனல் ராமனல் ரஸிக்க முடியவில்லை, சூர்ப்பணகை எதிர்பார்த்த படி. காதல்விழுகின்றன 'தீயைப்போல் சுடுகின்ற சொற்கள் (தீமாற்றம்).' அரக்கி பயம்பட அறிவித்த குறிப்பினை அண்ணல் அறிந்தான். சினம் பிறவாத உள்ளமும் சினம்திருகி, 'ஓடிப்போ' என்று எச்சரிக்க, எப்படி உருண்டோடி வருகின்றன அந்த வார்த்தைகள் அந்தச் சிறிய அழகுத் திருமுகத்திலிருந்து!

'பேடிப்போர் வல்லரக்கர்
பெருங்குலத்தை ஒருங்கவிப்பான்
தேடிப்போந் தனம்,இன்று
தீமாற்றம் சிலவிளம்பி
வீடிப்போ காதே;இம்
மெய்வனத்தை விட்டகல
ஓடிப்போ' என்(று)உரைப்ப,
உரைகடந்தாற்(கு) அவள்உரைப்பாள்.

[ஒருங்கு அவிப்பான் – ஒருசேர அழிக்கும் பொருட்டு. தேடிப் போந்தனம் – தேடி வந்திருக்கிறோம். தீ மாற்றம் – தீயைப் போலச் சுடுகின்ற சொற்கள். வீடிப் போகாதே – தொலைந்து போகாதே, நாச மாய்ப் போகாதே. உரை கடந்தாற்கு – (மக்கள் பேசும்) சொற்களை யெல்லாம் கடந்து நிற்கும் ராமபிரானுக்கு.]



அரக்கர் பெரும் போர்வீரர்கள். 'வல்லரக்கர்' என்று சொல்லும்படி வலிமை அவர்களுக்கு ஒரு பட்டமல்ல, பதவியல்ல, ஆபரணமல்ல, ஆயுதமுமல்ல; அவர்களோடு அவர்களாய் இசைந்து ஊடுருவி, அவர்களுடைய உயிரின் அடிவேருடன் பின்னிப் பிணைந்து வளர்ந்தோங்கும் பண்பு. அத்தகைய வல்லரக்கரை, பெரும் போர்வீரர்களை ராமன 'பேடிப் போர் வல்லரக்கர்' என்கிறன். ராமனுடைய அமைதி நிறைந்த சத்திய வீரத்திற்கு முன்பு ராட்சஸ வீரம் —

இந்த 'முறை துறந்த வீரம்' — வீரமே அல்ல, பேடித்தனமே தான்! இதனால் தான் 'பேடிப் போர்வல்லரக்கர்' என்கிறான் ராமன்.

அந்த ராட்சஸ குலம் 'பெருங் குலம்'; பலத்தாலும் குலத்தாலும் பெருமை வாய்ந்தது. ராவண குலம் ஸாக்ஷாத் பிரம்ம குலமே யன்றோ?— பிரம்மாவின் கொள்ளுப் பேரனான அசல் பிராம்மணன் அல்லவா? ஆனால் ராமன் அந்தப் பெருங் கும்பலைத்தான் 'பேடிப்போர் வல்லரக்கர்' என்று குறிப்பிடுகிறான். ஒழுக்கம்தானே — சத்தியம்தானே — உயர் குலம் ராமனுக்கு?

தான் தங்கும் இடத்தையும் 'மெய்வனம்' என்று குறிப்பிடுகிறான். சத்தியமும் தானுமாய் ஒதுங்கிப் பிழைக்க வந்த வனம் என்பது குறிப்பு. சத்திய பரிபாலனத்திற்காகத் தானே ராஜ்ய பரிபாலனம் துறந்து வனம் புகுந்தது? இத்தகைய சத்திய வீரமூர்த்தியை, தனிப்பெரும் புகழாளனாகிய ராமனைக் கவிஞன் 'உரைகடந்தான்'—மக்கள் சொற்களையும், கவிஞர் கற்பனைகளையும்கூடக் கடந்து நிற்பவன் — என்று போற்றுகிறான். இத்தகைய ராமன் மண்டூகக் கதையில் மயங்குவானா?

'வீடிப்போகாதே...ஓடிப்போ' என்பது போன்ற அதட்டல்களுக்குத் தான் அஞ்சிப் போகிறவளா சூர்ப்பணகை? ராவணேசுவரனைத் தலைவனாகக் கொண்டு ஒரு பெருங்குலம்போல் ஒத்து வாழும் ராட்சஸ மகாராஜ்யத்தைப் 'பேடிப்போர் வல்லரக்கர் பெருங்குலம்' என்று ராமன் இகழ்ந்துரைத்தும், அந்தச் சர்வாதிகார வல்லமையை இவன் உள்ளபடி உணர்ந்து பேசவில்லை என்றுதான் தீர்மானிக்கிறாள். 'அவ்வளவு ஆத்திரம் நல்லதன்று; அப்படி அலட்சியமாய்ப் பேசுவதும் சரியன்று. பிரம்மன் முதலான தேவர்களும் ராவண சக்கிரவர்த்திக்கு வரி செலுத்தும் குடிகள் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும். உமக்கு "நன்மையடையவேண்டும்" என்ற அந்தத் தன்னல அறிவாவது இருக்கிறதா? இருந்தால் என் வார்த்தையைக் கேட்பீராக' என்ற முகவுரையோடு நயமும் பயமுமாக ஒரு பிரசங்கம செய்யத் தொடங்குகிறாள்.

மண்டூகமா, மண்டுவா?

ராவணபயத்தைக்கொண்டே காரியசித்தி பெறலாமென்று இன்னும் கனவு காண்கிறாள். அந்தச் சர்வாதிகார விம்மாசனத்துடன் அந்தப் பெருங்குலத் தலைவனை இந்த அருமைத் தங்கை எப்படித் தூக்கிக் காட்டுகிறாள் பாருங்கள்:

'ஆக்கரிய மூக்(கு)உங்கை
அரியுண்டாள்!' என்றுரை
நாக்கரியும் தயமுகனார்!

[ஆக்கரிய - உண்டாக்கிக் கொள்ளமுடியாத. உங்கை - உமது தங்கை. அரியுண்டாள் - அறுக்கப்பட்டாள். நாக்கு அரியும் - நாக்கை அறுத்துவிடும். தயமுகனார் - தசமுகனார்: பத்துத் தலை ராவணனார்.]

'என் மூக்கு அறுபட்ட செய்தியை யாரேனும் அந்தத் தலைவனிடம் போய்ச் சொன்னால் உடனே வந்துவிடும் ஆபத்து. யாருக்கு? முதல் முதல் அந்தச் செய்தி சொன்னவருக்குத் தான்! என்ன? ஆம், அந்த நாக்கை அப்படியே இழுத்து அறுத்துவிட்டுப் பிறகுதான் மறுஜோலி, பிறகுதான் விசாரணை!' எப்பேர்ப்பட்ட ஆட்சிமுறை, எப்பேர்ப்பட்ட தசமுகனார்!



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

256. ராமனுக்குத் தம்பியா மன்மதன்?

ஒரு பெண்ணுக்கு ஏதாவது ஒரு அழகாவது இருக்குமாம். ஒருத்தி கூந்தலழகியாக இருக்கலாம். வேறொருத்தி கண்ணழகியாக இருக்கலாம். சூர்ப்பணகைக்கோ மூக்கு ஒன்று சரியாக இருந்ததாய் எண்ணம். தன்னை மூக்கழகி என்றே நினைத்துக் கொள்கிறாள். ஆஹா, அந்த மூக்கின் அருமை அதை இழந்த பிறகு தெளிவாய்த் தெரிகிறது. 'நான் இழந்த மூக்கு — ஐயோ! — அற்புத அழகு வாய்ந்தது; செயற்கையாகச் செய்து கொள்ள முடியாதது (ஆக்கரிய மூக்கு)' என்கிறாள். அழகிய உருவத்தையே படைத்துக்கொண்ட காமவல்லிக்கு வேறொரு மூக்கையும் உண்டாக்கிக் கொள்ள முடியும். எனினும் எந்தச் செயற்கை மூக்கும் இழந்த இயற்கை மூக்கிற்கு ஈடாகாது என்றே நினைக்கிறாள்.

இப்படிப்பட்ட அருமையான மூக்கை அறுத்தவர்கள் மூக்கையா அறுத்தார்கள்? தங்கள் குலத்தின் வேரையே அறுத்து விட்டார்களாம். என்ன கவலை! மூக்கு இழந்தது கூட இவ்வளவு கவலை கொடுக்கவில்லை! ஆசைக்கு உரிய ராமன் வம்ச நாசம் ஆகக்கூடுமே என்ற இந்தப் பெருங் கவலையைப் பாருங்கள்:

ஆக்கரிய மூக்(கு)உங்கை
  அரியுண்டாள் என்றுரை
நாக்கரியும் தயமுகனார்
  நாகரிகர் அல்லாமை,
மூக்கரிந்து நும்குலத்தை
  முதல்அரிந்தீர்! இனிஉமக்குப்
போக்கரி(து); இவ் அழகையெல்லாம்
  புல்லிடையே உகுத்தீரே!

[உங்கை — உம்முடைய தங்கை. அல்லாமை — அல்லாததால். நும் குலத்தை — உங்கள் குலத்தை. முதல் அரிந்தீர் — வேரோடும் அறுத்து விட்டீர்கள். போக்கு அரிது — தப்பிப் போவது என்பதே முடியாது. புல்லிடையே — புல்லிலே. உகுத்தீரே — சொரிந்து விட்டீர்களே.]

இனி ராவண கோபத்திலிருந்து தப்பி உயிர் பிழைப்பது ராம லட்சுமணர்களுக்கு இயலாத காரியம். தன்னையே கதியாக அடைவதைத் தவிர வேறு விதி இல்லை. எனவே, 'என் உயிரை நீங்கள் காப்பாற்றினால் உங்களுடைய உயிரை நான் காப்பாற்றுவேன்' என்று சூர்ப்பணகை பேரம் பேசுகிறாள். காமாந்தகாரத்திலே திசை யறியாது வெறிகொண்டு உழலும் உள்ளத்திலிருந்து பிறக்கும் பேரம் இது!

பிறகு, 'நான் காப்பாற்றாவிட்டால் அந்த ராவணனார் இருக்கிறார்!' என்று பயமுறுத்துகிறாள்:

'வான்காப்போர், மண்காப்போர்
மாநாகர் வாழ்உலகம்
தான்காப்போர், இனைத்தங்கள்
தலைகாத்து நின்(று),உங்கள்
ஊன்காக்க உரியார்யார்?
என்னைஉயிர் நீர்காக்கின்,
யான்காப்பென்; அல்லால்அவ்
இராவணனார் உளர்!' என்றாள்.

[வான் காப்போர் — வானுலகத்தைப் பாதுகாக்கும் தேவர்கள். மண் காப்போர் — மண்ணுலகம் காக்கும் மன்னர்கள். மா நாகர் — பெரிய நாக ஜாதியார். ஊன் — ஊனுடம்பு. யான் காப்பென் — நானே உங்களைக் காப்பாற்றுவேன்.]

பொல்லாத வல்லாள கண்டி

மகா பலசாலியான ராவணேசுவரன் தங்கையென்ற பெருமையோடு மாத்திரம் இவள் திருப்தியடையவில்லை. தானும் மகாபலசாலி என்பதையும் காதலனுக்கு ஆசையோடு அறிவித்துக் கொள்கிறாள்.

தேவர்க்கும் வலியான்தன்
திருத்தங்கை

[தேவர்க்கும் வலியான் — தேவர்களைக் காட்டிலும் வலிமையுடையவனான ராவணேசுவரன்]

என்று மறுபடியும் ஞாபகப்படுத்தி விட்டு ராமனை நோக்கி 'இந்தத் திருத்தங்கையாள்'

ஏவர்க்கும் வலியாள் என்(று)
இளையானுக்(கு) இயம்பீரோ?'

[ஏவர்க்கும் — எவருக்கும், எல்லாருக்கும்.]

என்று கேட்டுக் கொள்கிறாள். 'வல்லாளருக்கும் ஒரு வல்லாள கண்டன் ராவணன் என்றால் வல்லாள கண்டி இந்தத் திருத்தங்கை!' என்பதை லட்சுமணன் இனியாவது தெரிந்துகொள்ள வேண்டுமாம்.

இந்த வல்லாளகண்டி வாழ்க்கைத் துணைவியாகச் செய்யக்கூடிய அரும் பணிகளையும் அருமையாக எடுத்துரைக்கிறாள்:

மாப்போரில் புறங்காப்பென்;
வான்சுமந்து செலவல்லேன்;
தூப்பாலக் கனிபலவும்
சுவையுடைய தரவல்லேன்;
காப்போரைக் கைத்(த)என்? நீர்
கருதியது தருவேன்; இப்
பூப்பாலுய செல்வியலால்
பொருள்என்னோ? புகலுவீரே.





[மாப்போர் — பெரிய போர்கள். புறங்காட்பென் — பாதுகாத்திடுவேன். தூ — மாமிசம். வைத்து என் — வெறுத்து என்ன பயன்; வெறுப்பதால் என்ன பிரயோஜனம். புகல்வீர் — சொல்வீர்.]

'காதலரே! கேளும்: இனி நீங்கள் பெரும் போர்களுக்கும் அஞ்சவேண்டாம், உமக்கு நான் கவசமாயிருந்து பாதுகாத்திடுவேன். வாகனமாகவும் இருந்து உம்மை வானவீதியிலும் சுமந்து கொண்டு போவேன். இனி அந்தக் கவலையும் வேண்டாம்: இனிமேல் தான் உம்முடைய பசி உமக்கும் தெரிவதற்கு முன்பே காதலியாகிய எனக்குத்தான் தெரியப் போகிறதே—வேண்டிய உணவு வகைகளைத் தேடித் தருவேன்' என்று சொல்லிக் கொண்டே வரும் சூர்ப்பணகை, தன் 'மாப்பிள்ளை மரக் கறி போஜனக்காரன்' என்பதையும் மறந்துவிடாமலே தான் பேசுகிறாள். ராவணேசுவரனின் 'திருத் தங்கை' அல்லவா? 'மகா பலசாலி மட்டுமா? மகா புத்திசாலியும் நான் தான்!' என்பது நினைப்பு.

ஆகவே, 'மாப்பிள்ளை மாமிச உணவு ஜீரணிக்கப்பெறாத பலவீன ஜீரண உறுப்பை உடையவன்' என்பதையும் நினைத்துப் பார்த்து, 'அப்படிப்பட்ட ஜீரணக் கருவிகளுக்கு ஏற்றபடி எளிதில் ஜீரணமாகக்கூடிய



பழ வகைகளிலே, மாமிசம் போலச் சத்தும் சுவையும் உடையவற்றைக் கொணர்ந்து கொடுப்பேன்' என்று வாக்களிக்கிறாள். கடைசியாக, 'நீர் எதை விரும்பினாலும் உடனே குறிப்பால் அறிந்து கொடுத்து விடுவேன்' என்று வரம் கொடுக்கிறாள்.

இவ்விதமாக ராமனைக் காத்து வாழ்விக்க வந்த தன்னை இஷ்ட தெய்வமாக இதயத்தில் பிரதிஷ்டை செய்து கொண்டு உபாசனை செய்ய வேண்டாமோ? உபாசிப்பதை விட்டு உபேட்சிப்பதால் பயனென்ன? இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே 'சக்களத்தி'யான சீதா பிராட்டியைக் குறித்து இந்தச் 'சூர்ப்பணகைப் பிராட்டி'யின் உள்ளத்திலே பொறுக்க முடியாத பொறாமையும் வந்துவிடுகிறது!

பூப்போலும் மெல்லியலாள்
பொருள்என்னோ? புகல்வீரே

என்ற கேள்வியைத் தைரியமாக ராமனுக்கே போடுகிறாள்.

தனக்கு வடிவிலே மென்மை இல்லைதான், மேன்மை இருக்கிறதல்லவா? ஆம், வன்மை என்ற அந்த மேன்மைதான். குல மேன்மையும் இருக்கிறது. மதியின் கூர்மை, இளமையின் சீர்மை ஆகிய மேன்மைகளும் உண்டு. இப்படிக் குலம், நலம், பலம், மதிநலம் முதலான இத்தனையும் பொருந்தி யிருக்கும் தன்னைப்போல் வேறொரு பெண்மணியும் இருக்க முடியுமா? இம் மண்ணுலகத்திலு மில்லை, விண்ணுலகத்திலு மில்லையாம்:

குலத்தாலும், நலத்தாலும்,
குறித்தனவே கொணர்தக்க
வலத்தாலும், மதியாலும்,
வடிவாலும், மடத்தாலும்
நிலத்தாரும் விசும்பாரும்,
நேரிழையார் என்னைப்போல்
சொலத்தான்இங்(கு) உரியாரைச்
சொல்லீரோ, வல்லீரேல்?

[குறித்தனவே கொணர்தக்க – குறிப்பிட்டவற்றைக் கொண்டுவரத் தக்க. வலம்–பலம். மடத்தாலும்–இளமையாலும். நிலத்தாரும்–நிலத்தாருள்ளும். விசும்பாரும்–விண்ணுலக வாசிகளுள்ளும். நேரிழையார்–பெண்மணிகளை. வல்லீரேல்–நீங்கள் வல்லமையுடையவர்களானால்.]

இப்படிப் பிதற்றுகிறவள் இப்பேதை, மூக்கு இல்லாவிட்டால் தான் என்ன? இதனால் பெண்மைக்கு ஒரு பழுதுண்டோ? 'நெடுமூக்கும் நங்கைதானே?' என்றும் பேசுகிறாளாம்.

கண்டாரே காதலிக்கும்
கட்டுருகும் விடம்அன்றோ?

[விடம் – விஷம்.]

என்றும் தானே சமாதானம் சொல்கிறாளாம், தன் அங்கபங்கம் குறித்து.

எல்லாம் மன்மத வெறி தான், மன்மதன் கொடுமைதான்! அந்த வன்மைக்கு முன் எந்த ராட்சஸ, ராவண வன்மைதான் நிற்கமுடியும்? யார் அந்தப் 'பூங்கணையால் உயிர் வாங்கும்' வல்லாளன்? மென்னக் கேட்கிறாள் வல்லாள கண்டி ராமனிடம்:

அவனும்உனக்(கு) இளையானோ?

'அந்த மன்மதனும் உன் தம்பிதானோ, இந்த லட்சுமணத் தம்பி போலே?—என்ன கேள்வி! இந்தக் கேள்விக்கு விடையும் உண்டோ? இந்தப் பித்துக்கு மருந்தும் உண்டோ? . . . .



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

257. யாருக்குக் கூற்றுவன்?

'மூக்கு அரியப்பட்டதால் அன்பு இரட்டிப்பாயிற்று!' என்றுகூடச் சொன்னாளாம் சூர்ப்பணகை. 'ஆசை வெட்கம் அறியாது' என்பர். சூர்ப்பணகையின் ஆசையோ அங்கபங்கத்தையும் அதனால் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்பட்ட வேதனைகளையும், ராவண குலத்திற்கே ஏற்பட்டிருக்கும் அவமதிப்பையும் மறந்து பேசுகிறதாம்.

பின்இவளை அயல்ஒருவர் பாரார்என்
றேஅரிந்திர், பிழைசெய் திரோ?
அன்னதனை அறிந்தன்றே அன்(பு)இரட்டி
பூண்டதுநான், அறிவி லேனோ?

[அன்னதனை — அதை.]

என்று அங்கபங்கத்தின் உட்பொருளையும், தன் காதலின் பெருமையையும் எடுத்துக் கூறுவதைப் பாருங்கள்.

கடைசியாக, ராட்சஸ கோபத்தால் உலகமே அழிந்துவிடக் கூடுமென்றும், அந்த அழிவைத் தடுப்பதற்காகவாவது தருமத்தை நோக்கித் தன்னை வாழ்க்கைத் துணையாகக் கொள்ளவேண்டும் என்று சொல்லி முடிக்கிறாள்:

'வெப்பழியா நெடுவெகுளி வேலரக்கர்
ஈதறிந்து வெகுண்டு நோக்கின்,
அப்பழியால் உலகனைத்தும் நும்பொருட்டால்
அழிந்தனவாம்! அறத்தை நோக்கி,
ஒப்பழியச் செய்கில்லார் உயர்குலத்துத்
தோன்றினோர்; உணர்ந்து நோக்கி,
இப்பழியைத் துடைத்(து)உதவி, இனிதிருந்திர்
என்றெனும்!' என்(று) இறைஞ்சி நின்றாள்.

[வெப்பு — உபத்திரவம். வெகுளி — கோபம். வெகுண்டு நோக்கின் — கோபித்து நோக்கினால். நும்பொருட்டால் — உங்களுக்காக. ஒப்ப அழிய — ஒருசேர அழிந்து போக. செய்கில்லார் — செய்ய மாட்டார். இனிது இருந்திர் — இனிமையாக இருப்பீர். இறைஞ்சி — வணங்கி.]

'சாதாரணமாகவே கொடுங் கோபங்கொண்ட மூர்க்கர்கள் எங்கள் இனத்தார்' என்று ஒப்புக்கொள்கிறாள் சூர்ப்பணகை. தங்கள் உக்கிர சுபாவத்தினாலும் கோப குணத்தினாலும் உலகை ஹிம்ஸிக்கக் கூடியவர்கள் என்பதையும் குறிப்பாக உணர்த்துகிறாள். 'வெறும் வாயை மெல்லுகிற அம்மையார் ஒரு வாய் அவல் கிடைத்தால் சும்மா இருப்பாளா?' சூர்ப்பணகையை இவர்கள் இப்படிச் செய்தது தெரிந்து விட்டால் அரக்கர்கள் என்ன பாடு படுத்துவார்கள் தெரியுமா? ராமலட்சுமணரை அழிப்பதோடு அமையாமல் உலகத்தையே அழித்துவிடுவார்களாம். 'என், அவர்களுடைய அந்தக் கொடிய கோபப் பார்வையே உம்மை யழித்து உலகத்தையும் அழித்துவிடுமே!' என்று பயமுறுத்துகிறாள். தானும் கெட்டுச் சந்திர புஷ்கரணியையும் கெடுத்தவன் கதையாகப் போய்விடுமே! —என்று கவலைப்படுகிறாள்.

என்ன கவலை இந்த அம்மாளுக்கு! ராமனைப் பற்றிய கவலைமட்டுமா, உலகத்தைப் பற்றிய கவலையும்கூட! தன்னைப் பற்றிக் கவலையில்லை; தன் குலம், இனம் பற்றியும் இப்போது கவலையில்லை! 'உலகத்திற்குத் தீங்கு ஏற்படலாமா உங்கள் பிழையால்?'—என்ன லோகோபகாரச் சிந்தை. உயர்குடிப் பிறந்தார் தங்கள் பிழையால் பிறருக்குத் தீங்குநேர இடங்கொடுப்பது தருமமா?—என்ன தரும்சிந்தை! 'ஆகவே, பழியின்றி வாழ்வீர்!' என்கிறாள். 'காதலால் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தருமத்திற்காக ஏற்றுக் கொள்ளுங்கள்; உலக க்ஷேமத்திற்காக என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று இரந்து இறைஞ்சுகிறாள்.

சூர்ப்பணகையின் இந்த 'அதிகப் பிரசங்கம்' கேட்ட ராமன் அவளை நோக்கி, 'கொடிய அரக்கியே! உன் பாட்டி தாடகையை உயிர்கவர்ந்த பாணம் என்னிடம் இருக்கிறது, ஜாக்கிரதை!' என்றான். பிறகு, அரக்கர்களைக் கொல்வதாகச் சபதம் செய்துவந்திருப்பதாகவும் தெரிவிக்கிறான். இந்த வார்த்தைகளில்தான் எவ்வளவு காம்பீர்யமும் தன்னம்பிக்கையும் ததும்புகின்றன பாருங்கள்:

> 'தரைஅளித்த தனிநேமித் தயரதன்தன்
> புதல்வர்யாம்; தாய்சொல் தாங்கி
> விரைஅளித்த கான்புகுந்தேம்; வேதியரும்
> மாதவரும் வேண்ட, நீண்டு
> கரைஅளித்தற்(கு) அரியபடைக் கடல்அரக்கர்
> குலம்தொலைத்துக் கண்டாய், பண்டை
> வரைஅளித்த குலமாட நகர்புகுவேம்!
> ஆவைதெரிய மனக்கொள்' என்றான்.

[தரைஅளித்த — மகாராஜ்யத்தை ஆண்ட. தனிநேமி — ஏகசக்ராதிபத்தியம். விரைஅளித்த — வாசனை வீசுகிற. வேண்ட — வேண்டிக் கொண்டதால். நீண்டு — (இங்கே) நீண்டு பரந்து. கரைஅளித்தற்கு அரிய — எல்லை அமைப்பதற்கு அருமையான. படைக் கடல் அரக்கர் — கடல்போன்ற ராட்சஸப் படையினர். தொலைத்துக் கண்டாய் — தொலைத்த பின்பே. வரைஅளித்த குலமாடம் — மலைகளை அன்போடு ஒப்பாகக் கொண்டிருக்கும் சிறந்த மாடமாளிகைகள். மனக்கொள் — மனத்தில் கொள்வாய்.]





தசரத சக்கரவர்த்தியின் மாட்சியைத்தான் எவ்வளவு அதிசயமாக வெளியிடுகிறது,

தரைஅளித்த தனிநேமித் தயரதன்தன்
புதல்வர்யாம்!

என்ற அருமையான வாக்கு! விதுரன் பாண்டவரிடம் திருதராஷ்டிர மகாராஜாவின் மாட்சி தோன்ற,

மைவரைத் தோளான்.
பெரும்புக ழாளன்,
மாமகள், பூமகட்(கு)
ஓர்பண வாளன்,
மெய்வரு கேள்வி
மிகுந்த பலவன்,
வேந்தர் பிரான்திரி -
தாட்டிரக் கோமான்

பேசுவதாகப் பாரதியார் 'பாஞ்சாலி சபத'த்தில் பாடியிருக்கிறார். அத்தனை சொல்லடுக்குகள் இல்லாமலே தசரத மாட்சியும் அந்தக் குலப்பெருமையும் அப்படியே அற்புதமாக வெளிப்படுகின்றன அல்லவா?

சூர்ப்பணகையின் துஷ்ட புத்தியும் ஜாலப் பேச்சும் கபட நாடகமும் தசரத ராஜகுமாரனுடைய குலசர்வத்தையும் அகங்காரத்தையும் கூடத் தூண்டிவிடுகின்றன. 'சக்கிரவர்த்தி குமாரர் நாங்கள்' என்று சொல்லிவிட்டுத் தாய்க்கும் எவ்வளவு பெருமை கொடுத்துப் பேசுகிறான்! கோசலைத் தாய்க்கா? சுமித்திரைக்கா? கைகேயித் தாய்க்குத் தான்! 'தாய் சொல் தாங்கி விரை அளித்த கான் புகுந்தேம!'

பிறகு, 'முனிவர்களுக்கு அபயதானம் செய்து ராட்சஸ வதம் செய்த பின்பே அயோத்தியை அடைவோம்!' என்று சொல்லும் தர்மா வேசத்தைப் பாருங்கள். அப்பால் 'இவை தெரிய மனக்கொள்' என்று அழுத்திக் கூறி முடிப்பதைக் கவனியுங்கள்.

கரைஅளித்தற்(கு) அரியபடைக் கடல்அரக்கர்
குலம்தொலைத்துக் கண்டாய். பண்டை
வரைஅளித்த குலமாட நகர்புகுவேம்!
இவைதெரிய மனக்கொள்' என்றான்.

என்பதைப் பாடும்போது, 'துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனத்திற்காகப் பரம்பொருளின் அதிகார முத்திரைதரித்து வந்திருக்கும் அவதாரமூர்த்தியின் வீர உரையன்றோ இது?' என்ற உணர்ச்சி உண்டாகிறது.

இந்தப் பாட்டு முழுவதையும் பாடிப்பாடிப் பாருங்கள்.

இந்திர ஜாலமெல்லாம் – கவியில்
இயற்றிக் காட்டிடுவோன்
மந்திரச் சொல்லாலே - உள்ளம்
மயங்கச் செய்திடுவோன்

என்று கவிமணி கவிச்சக்கரவர்த்தியைக்குறித்துப் பாடியிருப்பது எப்படி எவ்வளவு உண்மையானது என்பது தெளிவாகும்.

அப்படி அரக்கர்களை வம்சநாசம் செய்து ராமன் தன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தன் உதவி இன்றியமையாதது என்று வாதாடுகிறாள் சூர்ப்பணகை. லட்சுமணன் கடுங்கோபத்துடன் தன் வேலாயுதத்தைக் கடைக்கணித்த வண்ணம் 'இந்த அரக்கியை இப்போதே கொல்ல வேண்டும்' என்று ராமனுடைய கட்டளையை எதிர்பார்த்தான். ராமனும், 'இனியும் அப்பால் போக வில்லை யென்றால் நீ சொன்னபடியே செய்யலாம்' என்றான். சூர்ப்பணகைக்கு மறுபடியும் பகைமை யுணர்ச்சி மேலோங்கி விட்டது.

'மூக்கையும் காதையும் இழந்த பின்பும் உங்களுடன் வாழப் பொறுப்பேனோ? உங்களுடைய யோக்கியதையை உள்ளபடி அறியும் பொருட்டல்லவா வஞ்சனையாக அப்படி யெல்லாம் பேசினேன்?' என்று தன் பழைய காதற்கதையைத் தந்திரமாக மூடி மறைத்து விடப் பார்க்கிறாள். ராமனைப் போலவே தானும் கம்பீரமாகவும் கர்வத்துடனும் பேசப் பார்க்கிறாள்.

கடைசியாக, 'இதோ பாருங்கள், உங்கள் யமனை இப்பொழுதே கொண்டு வரப் போகிறேன்' என்று பயமுறுத்திக் கொண்டே சூர்ப்பணகை வேகமாகவும் கோபமாகவும் போவதைப் பாருங்கள் :

'காற்றினிலும் கனலினிலும் கடியானைக்
கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்!'
என றுசலம் கொண்டு போனாள்.

[கடியான் — விரைவுள்ளவன். கூற்றுவன் — யமன். சலம் — தணியாத கோபம்.]

ராமலட்சுமணர்களுக்குக் கூற்றுவனைக் கொண்டு வருவதாகச் சொல்லிப் போகும் அரக்கி, கரன் முதலிய அரக்கர்களைக் கூற்றுவன் முன் கொண்டு வரும் தூதியாகவே போகிறாள்.



258. கோரம், காதல், குரோதம்

செவ்வானம் படர்ந்த மேகம் போலே — ஹா, என்ன கோரம்! உடம்பிலே இரத்தம் சொரிய, இரத்தம்போல் செம்பட்டை மயிரும் அலங்கோலமாய் விரிந்து தொங்க, ஹோ வென்று கதறிப் புரண்டு கொண்டிருக்கிறாள். கதறல்களும் அலறல்களும் ஏதோ ஒரு யம பேரிகை கொட்டுவது போல் முழங்குகின்றன!

யம பேரிகை

இப்படிக் கரன் காலிலே கிடந்து புரளும் சூர்ப்பணகையைப் பாருங்கள்.

'அழுங்கு நாள்இ(து!')என்(று)
அந்தகன் ஆணையால்
தழங்கு பேரி
எனத்தனித்(து) ஏங்குவாள்,
விழுங்கு மேகம்
இடித்தவெந் தீயினால்
புழுங்கு நாகம்
எனப்புரண் டாளரோ!

[அழுங்கு — அழிகின்ற. அந்தகன் — யமன். ஆணை — கட்டளை. தழங்கு — அடிக்கப்பட்டு முழங்குகின்ற. பேரி — பேரிகை; முரச வாத்தியம். தனித்து — தனியே. ஏங்குவாள் — ஏங்கிக் கதறுகின்றவளான சூர்ப்பணகை. வெந்தீ — கொடிய தீ. புழுங்கு — வெதும்பித் துடிக்கின்ற.]

'அழிவுகாலம் இதோ வந்துவிட்டது, வாருங்கள், வாருங்கள்!' என்று யமராஜாவின் ஆணையால் கால பேரிகை கரன் முதலானவர்களை நோக்கி அலறுவதுபோல் ஏங்கி அலறுகிறாளாம் சூர்ப்பணகை. இடி இடிக்கப் புழுங்கிப் புரளும் கருநாகம்போல் துடிக்கிறாள், புரள்கிறாள்.

பூரளும்போதே மூக்குத் துவாரத்திலிருந்து பெருகும் இரத்தம் கண்களையும் முழுக்காட்டுகிறது. கரனுக்குப் பற்றி எரிகிறது கோப நெருப்பு கப கப வென்று. அது புகைந்து கடுஞ் சொற்களாய்க் கிளம்புகிறது. ‘உன்னைப் பார்த்து நடுக்கம் சொன்னாமல் இவ்விதமாகச் செய்து போனவர் யாரோ?’ என்று தான் கேட்கிறான், அந்த ராட்சஸத் தொண்டையால், அவ்வளவு எரிச்சலும் புகைச்சலுமாய். அந்த ராட்சஸ வேஷத்தைப் போட்டுக்கொண்டு பேசுகிறது கம்பன் கவிதை :

வாக்கிற்(கு) ஒப்பப்
 புகைமுந்து வாயினன்
நோக்கிக், ‘கூசலர்,
 நுன்னை இத் தன்மையை
ஆக்கிப் போனவர்
 ஆர்கொல்?’என் றான்அவன் :
மூக்கிற் சோரி
 முழீஇக்கொண்ட கண்ணினுள் —

[கூசலர்—கூச்சம் இல்லாதவர்களாய். நுன்னை—உன்னை. தன்மையை ஆக்கி—தன்மையுடையவன் ஆகச் செய்து. ஆர்கொல்—யாரோ. மூக்கிற்சோரி — மூக்கிலிருந்து பெருகும் இரத்தம். முழீஇக்கொண்ட — முழுகடித்த ; முழுக் காட்டிய.]

சூர்ப்பணகையின் கோர வேஷத்தையும் போட்டுக் கொண்டு பதில் சொல்கிறது கவிதை, அந்த ஹிருதய தாபம் அப்படியே தோன்ற :

இருவர், மானிடர்,
 தாபதர், ஏந்திய
வரிவில் வாட்கையர்,
 மன்மதன் மேனியர்,
தரும நீரர்,
 தயரதன் காதலர்,
செருவில் நேரும்
 நிருதரைத் தேடுவார் !

[தாபதர் — தவசிகளின் வேடம் கொண்டவர். வரிவில் — கட்டமைந்த வில். வில் வாட்கையர் — வில்லும் வாளும் கையில் வைத்துக் கொண்டிருப்பவர். தரும நீரர்—தரும குணம் உடையவர்கள். காதலர்—(இங்கே) பேரன்பிற்குரிய புதல்வர். செரு—போர். நேரும்—எதிரே நிற்கக்கூடிய. நிருதர்—அரக்கர்.]

பழி வாங்கும் காதலி

“என்னை இப்படி ஆக்கியவர்கள் பெரும் படைகளை உடையவர் அல்லர் ; பெருங் கூட்டத்தினர் அல்லர். ஆசாமிகள் இருவரே” என்கிறாள் முதன் முதல்.

‘அந்த இருவரும் அரக்கர் அல்லர் ; தேவர் அல்லர் ; கேவலம் மனிதர்களே !’ என்கிறாள். ‘மனிதர்களிலும் கேவலமான — சடை முடியும் மாவுரியும் தரித்த—ஆண்டிகள் !’ என்கிறாள்.

இவ்விதமாகப் பேசத் தொடங்கியவன், 'இப்படிச் சொல்லி விட்டோமே, கரன் அலட்சியம் செய்து விடலாகாதே!' என்று கருதியவன் போல், 'வேஷம் தான் தவவேஷம்; கையில் இருப்பன தண்டம் கமண்டலம் அல்ல, வில்லும் வாளும்!' என்று எச்சரிக்கை செய்கிறான்.

இப்படி ராமலட்சுமணரைக் குறித்துப் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கும் போதே, உள் மனத்தில் மறைந்து கிடக்கும் பழைய காதல்-வெறியைத்தையும் வைராக்கியத்தையும் பீறிக்கொண்டு புறப்படுகிறது. தனக்குச் சகோதரன்—முறையிலும் சேனாதிபதி ஸ்தானத்திலும் இருக்கும் கரன் முன் பேசுகிறோமே என்ற ஞாபகம் கூட இல்லாமல்,

மன்மதன் மேனியர்

என்று தன் உள்ளம் கவர்ந்த கள்வர் இருவரையும் ஒரு நிகராய்ப் பாராட்டுகிறது கோர சொரூபம். 'ஆஹா! அந்தத் திருமேனிக்குத் தவ வேஷமும் ஓர் அழகு தான்' என்று எண்ணுகிறான். அந்த வேஷத்தோடு உலாவிய வீர சௌந்தரியத்திற்கு இவன் நெஞ்சு அடிமையாகி விட்டது.

அவர்களுடைய தரும குணத்தைக்கூடப் பாராட்டாமல் இருக்க முடியவில்லையாம். அந்த ராட்சஸ சேனாபதி முன்னிலையிலும், அவர்களுடைய தருமகுணத்தையும் சிறிது பாராட்டத் துணி



கின்றான் என்றால் இவனது ஆசையையும் மயக்கத்தையும் என்னென்பது? தன்னை அங்கபங்கமாக்கிய லட்சுமணனையும் சேர்த்துத் 'தரும நீரர்' என்று இவள் குறிப்பிடுவது அதிசயத்திலும் அதிசயம்—எனினும் காதலர் உலகில் நிகழும் அற்புதம்தான்!

கடைசியாக, ராமலட்சுமணரை இன்னாரென்று குறிப்பிடுவதற்காகத் 'தசரத ராஜகுமாரர்கள்' என்கிறாள். பிரசித்தரும் கிழச் சக்கரவர்த்தியுமான தசரதர் பெயரைச் சொன்னால்தானே கரனுக்குத் தெரியும்? அந்தப் பெயரை ராமன் சொல்லித் தெரிந்து கொண்டிருக்கிறாள் அல்லவா?

தரையளித்த தனிநேமித்
  தயரதன்பின் புதல்வர்யாம்

என்ற அந்தக் கம்பீர வாக்கு இவள் உள்ளத்திலே எப்படிப் பதிந்து விட்டது! அதை நினைத்துக் கொண்டு,

தயரதன் காதலர்

என்று இவள் இங்கே சொல்லும்போதே, இந்தக் 'காதலி'யுள்ளம் அவர்களுடைய யௌவன சௌந்தரியத்தை மறந்து விட்டதென்று சொல்ல முடியுமா?

இவ்விதமாகப் பேசிவரும் சூர்ப்பணகை கரன்முன் தான் இருப்பதையும் பேசுவதையும் திடீரென்று உணர்ந்து கொண்டவள் போல் தன் மோக வெறியை அடக்கிக் கொண்டு அவனுடைய வீர வெறியைத் தூண்டப் பார்க்கிறாள். 'உன்னை இப்படி ஆக்கிப் போனவர் யாரோ?' என்று கேட்ட கரனுக்கு, 'என்னை இப்படி ஆக்கியவர் ஓடிப்போய் விடவில்லை; யுத்தத்திலே தங்களுக்கு எதிராக நிற்கக்கூடிய அரக்கர்களும் இருக்கிறார்களோ என்று தேடித் திரிகிறார்கள்' என்கிறாள்.

[illegible] செருவில் நேரும்
  நிருதரைத் தேடுவார்

என்ற இவள் வாக்கிலே 'விரைவில் நீ இருக்கும் இந்த ஒளிப்பிடத்தையும் கண்டுபிடித்து விடுவார்கள்!' என்பது குறிப்பு.

கரனுடைய வீரவெறியைத் தூண்டி விடுவதற்காகச் சூர்ப்பணகை மேலும் பேசுகிறாள்:

ஒன்றும் நோக்கலர்
  உன்வலி; ஓங்(கு)அறன்
நின்று நோக்கி
  நிறுத்தும் நினைப்பினர்;
'வென்றி வேற்கை
  நிருதரை வேரறக்
கொன்று நீக்குதும்!'
  என்றுணர் கொள்கையார்.

[நோக்கலர் – பொருளாக நோக்கவில்லை. வலி – வலிமை. வென்றி வேற்கை – வெற்றியைத் தரும் வேல் ஏந்திய கை. நிருதர் – அரக்கர். நீக்குதும் – ஒழிப்போம். உணர் – உணர்கின்ற.]

இந்தப் பாட்டைப் பாடப் பாட, 'வீரவெறியை அரக்கி எப்படி மூட்டுகிறாள்?' என்பது நன்கு புலனாகும்.

கடைசியாக அவர்கள் தன்னைப் பங்கப்படுத்தியதற்குக் காரணமும் சொல்லுகிறாள். நடந்ததைச் சொல்லப் போகிறாளா? அது எப்படி முடியும்? அடுத்த வாரம் பார்க்கலாம்.



259. வென்ற கொள்கை

'உன்னை அவர்கள் பங்கப் படுத்தியதற்குக் காரணம் என்ன?' என்று கரன் சூர்ப்பணகையைக் கேட்கவில்லை. 'உன்னை இக் கோலம் கண்டவர் யார்?' என்று தான் கேட்டான். எனினும் சூர்ப்பணகை அந்தக் காரணத்தையும் சொல்லத் தொடங்கிச் சீதையின் அழகை வருணிக்கிறாள். இல்லை, அந்த அழகை வருணிக்க முடியவில்லை என்கிறாள். 'அப்பேர்ப்பட்ட கட்டழகி நமது அண்ணனும் சக்கரவர்த்தியுமான இலங்கேசனுக்கே தகுதியானவள்' என்று எண்ணினாளாம். 'அந்த எண்ணத்துடன் எடுத்துப் போக அவள் மேல் பாய்ந்தேன். அந்தக் கோபக்காரர் —ஐயோ!—என் மூக்கைத் துண்டமாக்கி விட்டார்' என்று சொல்லி முடிக்கிறாள்:

'விண்டு மேல்விழுந்-
தேனை வெகுண்(டு)அவர்
துண்டம் ஆக்கினர்
மூக்கெ'னச் சொல்லினாள்.

[விண்டு – (மனம்) மாறுபட்டு. வெகுண்டு – கோபித்து.]

'காரணமில்லாமல் காரியம் இல்லை' என்ற தர்க்க விதிக்கு இணங்கக் காரணம் காட்டினாள் சூர்ப்பணகை. ஆனால் அந்தக் காரண காரியப் பொருத்தத்தை ஆராய்ந்து பார்க்கத்தான் கரனுக்கு அவகாசம் ஏது?

துண்டம் ஆக்கினர்
மூக்கு!

என்றாளே கடைசியில், அது கேட்டதும், 'எங்கே? காட்டு அந்த மூக்கை!' என்று கர்ஜித்துக் கொண்டே எழுந்திருக்கிறான். 'இது நம் குலத்துக்கே ஒரு மூக்கறுப்பு. மனித வர்க்கத்தைக் கருவறுப்பது தான் இதற்குப் பரிகாரமாகுமா?' என்று கோபிக்கிறான், கொதித்துப் பொங்குகிறான்:



எழுந்து நின்(று)உல
கேழும் எரிந்துகப்
பொழிந்த கோபக்
கனலுகப் பொங்குவான்!

[எரிந்து உக—எரிந்து பொடியாய்ச் சிதற. கனல் உக — கனல் சிந்த.]

இப்படிக் கோபாவேசம் கொண்ட கரன் 'வருக தேர்' என்று கர்ஜித்தான். உடனே நாம் புறப்பட வேண்டும் என்ற எண்ணம் தான். ஆனால் 'தருக இப்பணி' என்று ஏதோ பிரசாதம் வாங்குவது போல் கிளம்பி விட்டார்கள் பதினான்கு அரக்கர்கள் ரோஷத்துடன். இந்த அற்பக் காரியத்துக்காகத் தங்கள் தலைவனே புறப்படவேண்டுமா?

கரைஅளித்ததற்(கு) அரியபடைக்
கடலரக்கர்

என்றெல்லாம் ராமன் கேள்விப்பட்டு எதிர்பார்த்திருக்க, அரக்கர் பதினால் வரா புறப்படுகிறார்கள்? ஆம், ஆனால் அவர்களுடைய ஆர்ப்பாட்டம் கடலையும் உலகத்தையும் கலங்க அடிக்கிறதாம். அந்தத் 'திருமேனி'களோ ஒரே ஆலகால விஷத்தின் பதினாறு அவதாரங்கள்!

வேலை ஞாலம்
வெருவுறும் ஆர்ப்பினர்
ஆல காலம்
திரண்டன்ன ஆக்கையார்!

[வேலை — கடல். ஞாலம் — உலகம். வெருவுறும் — அஞ்சத் தக்க. ஆர்ப்பினர் — ஆரவாரம் செய்கின்றவர்கள். திரண்டன்ன — திரண்டாற் போன்ற. ஆக்கை — உடம்பு.]

இந்தப் பதினால்வரும் ஞாபகப்படுத்திய பின்புதான் கரனுக்கும் அந்தச் சிறுவர்களோடு தானே நேரில் போர் செய்யப் புறப்படுவது கௌரவக் குறைவு என்று படுகிறது. இந்தச் சிறு விஷயம் கூடப் புலனாகவில்லை, சூர்ப்பணகையின் பரிபவங்கண்டு கொதித்தெழுந்த கோபாவேசத்திலே:

'நன்று சொல்லினிர்;
நான்இச் சிறுர்கள்மேல்
சென்று போர்செயில்
தேவர் சிரிப்பரால்;
கொன்று சோரி
குடித்(து)அவர் கொள்கையை
வென்று, மீளுதிர்
மெல்லிய லோ(டு)'என்றான்.



[சொல்லினிர் — சொன்னீர்கள். சிறர் — சிறுவர். சோரி— இரத்தம். மீளுதிர் — திரும்பி வாருங்கள். மெல்லியலோடு — மென்மையான தன்மையுள்ள அந்த மானிடப் பெண்ணுடன்.]

அந்தச் சிறுவர்களோடுதான் போர் செய்தால் தோற்று ஓடுங்கிக் கிடக்கும் அடிமைத் தேவர்கள் சிரிப்பார்களே!— என்ற கவலை ஏற்பட்டதும் கரன் அந்தப் பதினால்வரை நோக்கி, 'நீங்களே போய் அந்த மானிடச் சிறுவர்களை வெட்டி வீழ்த்தி இரத்தம் குடித்து வாருங்கள்' என்று கர்ஜித்தான். அவர்களைக் கொன்று இரத்தம் குடித்தாலும் கரனுடைய இரத்தவெறியும் கோபவெறியும் தீர்ந்தபாடில்லையாம். அவர்களுடைய கொள்கையும் வெல்லப்பட வேண்டும்; கொல்லப்பட வேண்டும்! —என்கிறான்.

கொன்று சோரி
 குடித்(து) அவர்
 கொள்கையை
வென்று, மீளுதிர்

என்றவன் எவ்வளவு ஞாபகத்துடன்,

 மெல்லியலோடு

என்று கூறி முடிக்கிறான் பாருங்கள். சூர்ப்பணகையின் வாக்குமூலத்தின் மூன்று முக்கிய விஷயங்களும் இவ்வளவு கோப வெறியிலும் ஞாபகம்தான் கரனுக்கு—'பேயும் நினைவோடு ஆடுகிறது' என்கிறார்களே அந்த மாதிரி!

சூர்ப்பணகை சொன்னாளல்லவா, அறத்தை நிலை நிறுத்துவதும் அரக்கரைக் கொன்றொழிப்பதும் அவர்களுடைய கொள்கை யென்று? 'அவர்களோடு அந்தக் கொள்கையையும் வென்று கொன்று மீளவேண்டும், மெல்லியலோடு' என்று கட்டளையிடுகிறான்.

அந்த அரக்கர்களின் துஷ்ட குதூகலத்தைச் சொல்லவா வேண்டும்? பதினால்வரும் கரனை வணங்கி, யமதூதன் முன் செல்லப் பின் செல்பவர் போல், சூர்ப்பணகை காட்டிச் செல்லும் வழியிலே தொடர்ந்து போகிறார்கள்.

'தயரதன் காதலர்'

என்று அருமையாகச் சூர்ப்பணகை குறிப்பிட்டாளே, அந்த

மன்னன் காதலர்
வைகிடம் நண்ணினர்.

[மன்னன் — தசரத மன்னன். வைகு இடம் — தங்கியுள்ள இடம். நண்ணினர் — அடைந்தார்கள்.]

அங்கே ராமனைக் கண்டு விடுகிறாள் சூர்ப்பணகை. அப்போது ராமன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? தியானத்தில் இருக்கிறானாம். அரக்கர்களோ ஒரே அட்டகாசமும் குழப்பமுமாகிறார்கள், அந்த அதிசயத் தோற்றத்தைக் கண்டதும். அந்த அரக்கர்களுக்கு 'அதோ!' என்று கையால் சுட்டிக் காட்டுகிறாள், தியானத்தில் இருப்பவனை:

துமிலப் போர்வல்
அரக்கர்க்குச் சுட்டினாள்,
அமலத் தொல்பெயர்
ஆயிரத்(து) ஆழியான்
நிமலப் பாதம்
நினைவின் இருந்தஅக்
கமலக் கண்ணனைக்
கையினில் காட்டினாள்.

[துமிலம் — ஆரவாரம்; குழப்பம். அமலத் தொல் பெயர் — குற்ற மற்ற பழமையான பெயர்கள். ஆழியான் — சக்கராயுதத்தை உடையவன். நிமலப் பாதம் — குற்றமற்ற திருவடிகள்.]

தன் கமலக் கண்களை மூடிய வண்ணம் தியானத்திலிருந்த அழகனைச் சுட்டிக் காட்டுகிறாள். இவளைப் பைத்தியக்காரியாக்கிய அந்தக் கண்கள் இப்போது மூடி யிருந்ததால் பிழைத்தாள். துணிந்து காட்டினாள் அரக்கர் களின் போர் வெறிக்கு இலக்காக.

ஆயிரம் பெயர்களும் ஆயிரம் முடிகளுமாய், துஷ்ட நிக்கிரகத்திற்குச் சக்ராயுதபாணியாய், அகில லோகத்திற்கும் ராஜாதி ராஜனாய்த் தேவாதி தேவனாய், அவதாரமூர்த்தியான தனக்குத் தோன்றாத் துணையாம் ஆதியஞ் சோதியாய் விளங்கும் விராட் புருஷனின் நிமல பாதம் ராமன் நினை வி லிருக்கிறது. வந்த காரியமும் நினைவில் இருக்கிறது. அந்தத் தெய்விக அதிகார முத்திரை தரித்து,

கரை அளித்தற்(கு)அரியபடைக்
கடலரக்கர் குலம்தொலைத்து

உலகம் காக்க வந்தவனல்லவா?

'பிடி, அடி, விடாதே!' என்ற கர்ஜனைகள் கேட்டு விழித்துக் கொண்ட ராமன் என்ன செய்கிறான்? 'வந்தேன், கண்டேன், வென் றேன்' என்று சுருங்கக்கூறி விளங்க வைத்த ஸீஸரின் வெற்றி-வாக்கியம் தான் இந்தக் கவி வாக்கிற்கு ஈடாகுமா? நீங்களே பார்த்துக் கொள் ளுங்கள்:

சரங்கள் ஓடின
தைக்க, அவர்கள்தம்
சிரங்கள் ஓடின,
தீயவள் ஓடினாள்!

[சரங்கள் — (ராம) பாணங்கள். தீயவள் — (இங்கே) சூர்ப்பணகை.]



260. அருளை மோதும் இருள்

ஒரு சிங்கத்தின் மீது யானைகள் படை யெடுத்து வந்து சூழ்ந்து கொள்கின்றனவாம். நான்கல்ல, ஐந்தல்ல, முரட்டுத்தனமுள்ள பதினைந்து யானைகள். ஒரு யானை மட்டும் விலகியிருந்து, சிங்கம் வதமாகுமென்றோ, பிடிபடுமென்றோ எண்ணி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. முடிவு? வெறிகொண்டு எதிர்த்த பதினான்கு ஆண் யானைகளும் வெகு விரைவில் சாய்ந்து கிடக்கின்றன. நம்பிக்கை யிழந்த பெண் யானையோ பிளிறி ஓடுகிறது, தும்பிக்கையைத் தலைமேல் தூக்கிக்கொண்டு. இது என்ன பைத்தியக்கார யானைக் கதை என்கிறீர்களோ? இல்லை, பதினான்கு அரக்க வீரர்களைப் போருக்குத் தள்ளிவிட்டு, இப்போது மருண்டோடும் சூர்ப்பணகையின் கதை தான் இது.

விஜயச் செய்தியை எதிர் நோக்கி, ஜாஜ்வல்யமாய் ஒளி வீச வேலாயுதத்தை அங்குமிங்கும் வீசிக் கொண்டிருக்கிறான். 'பதினான்கு அரக்கர்களும் ராமனைக் கொன்று வருவார்களா, தின்று வருவார்களா? கைப்பிடியாகப் பிடிக்க அந்தப் பிடியிலே நசுங்கிப் போகாமல் உயிருடன் தான் வரப் போகிறானா ராமன்?' என்றெல்லாம் எண்ணங்கள் உள்ளத்திலே மின்னிட்டுப் போரிடுகின்றன. இப்படி வீற்றிருக்கும் கரனிடம் தோன்றுகிறாள் சூர்ப்பணகை:

ஒளிறு வேற்கரற்(கு)
    உற்ற(து) உணர்த்தினாள்,
குளிறு கோபவெங்
    கோளரி மாஅடக்,
களிறெ லாம்படக்
    கைதலை மேலுறப்
பிளிறி ஓடும்
    பிடிஅன்ன பெற்றியாள்.

[துளிறு — ஒளி வீசுகிற, ஜொலிக்கிற. வேல் கா(ர்)க்கு — வேலாயுதத்தையுடைய கானுக்கு. குளிறு — கர்ஜிக்கிற. வெங்கோளரி—கொடிய வலிமை வாய்ந்த ராஜ சிங்கம். அட — கொல்ல. களிறு எலாம்—ஆண் யானைகளெல்லாம். பட—அடிபட்டுச் சாய. மேல்உற—மேலே பொருந்த. பிடி — பெண் யானை. அன்ன — ஒத்த. பெற்றி—நிலைமை.]



'நம்முடைய அரக்கர்கள், அங்கே ஒரு மனிதன் – ஒரே ஒருவன்—செய்த போரில் அழிந்தனர், அந்தப் பதினாலு ராட்சஸ குல தீபங்களும் அவிந்து போயின, ஐயோ!' என்ற உணர்ச்சி - வேகத்திலே, கானுக்குக் கண்கள் இரண்டும் சிவந்து போகின்றன, ஒரே இரத்தச் சிவப்பாய். உள்ளே விருந்து பொங்கிய உணர்ச்சியோடு இதய ரத்தமும் பொங்கி வர அந்த இரத்தத்தை விழிகள் கக்குவது போலத் தோன்றுகிறதாம், அந்தக் கோபவெறி. அத்தகைய ரௌத்ராகாரமான கோபாவேசத்தோடு கூடிய கரனை அகத்தோடு முகமும் தெரியக் காட்டும் படம் இது :

அங்க ரக்கர்
அவிந்தழிந்தாரெனப்
பொங்கு ரத்தம்
விழிவழிப் போந்துக,
வெங்க ரப்பெய
ரோன்வெகுண் டான்,
சங்க ரற்கும் [விடைச்
தடுப்பருந் தன்மை
[யான்!



[அங்கு அரக்கர் — அவ்விடத்தில் (ராமனிருந்த இடத்திலே) அரக்கர்கள். பொங்கு அரத்தம்—பொங்குகிற இரத்தம். போந்து உக—வெளிச் சிந்த. வெங்கரப் பெயரோன்—கொடிய கரன் என்னும் பெயரையுடையவன். வெகுண்டான்—கோபித்தான். விடைச் சங்கரன்—விருஷப வாகனத்தோடு கூடிய ஸம்ஹார மூர்த்தியான சிவபெருமான். தடுப்பு அரு—தடுக்க முடியாத.]

இந்தப் பாட்டைப் பாடிப் பாடிக் கரனை இனங்கண்டு கொண்டு, மேலே போகலாம் — கரனுடைய கட்டளை எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கலாம். 'கொண்டு வா படையை' என்று கரன் கர்ஜித்ததும், அந்த ராட்சஸ ராணுவ யந்திரம் முழுவதும்—சக்கரத்திற்குள் சக்கரமாக—எப்படிச் சுழன்று வேலை செய்யத் தொடங்குகிறது!

ஒரு வேலைக்காரனை நோக்கி எழுந்தது கரன் கட்டளை. உடனே பக்கத்தில் இருந்த பணியாளர்களெல்லாம் ஓட்டம் பிடிக்கிறார்கள். ஒரு நொடிப் பொழுதில் 'ஓங்கிய குன்றுதான் வருகிறதோ!' என்று அதிசயிக்க வருகிறது பெரிய யானை. ஏறி முழங்குகிறது யானைமேல் பெரிய பேரிகை. முடிவில்லாமல் மேகங்கள் வந்து கொண்டேயிருப்பது போலத் திரண்டு வருகின்றனராம் தேர்களில் அரக்கர்கள்.

பேரி ஓசை
  பிறத்தலும், பெட்புறு
மாரி மேகம்
  வரம்பில வந்தெனத்,
தேரின் சேனை
  திரண்டது, தேவர்தம்
ஊரும் நாகர்
  உலகும் உலைந்தவே!

[பேரி—பேரிகை. பெட்பு உறு—(போரில்) ஆசை மிகுந்த. வரம்பு இல வந்தென—ஒரு வரம்பும் இல்லாமல் வந்து கொண்டேயிருந்தாற் போல. நாகர் உலகு—நாக லோகம்.]

இப்போது பாருங்கள், பொம்மென்ற ரணபேரிகையின் இடிகளுக்கிடையே கருங்கடல் போலப் பொங்கி எழும் சேனகளை. திடீரென்று கொடிகள் பறக்கின்றன, விண்ணிலே ஒரு காடு அடர்ந்து படர்வதுபோல. காற்றிலே அந்தக் கொடிகள் நீண்டு நிமிர்வதும் கூத்தாடுவதும் — ஆஹா, என்தானோ இந்த உத்ஸாக வெறி?



காடு துன்றி
விசும்பு கரந்தென
நீடி எங்கும்
நிமிர்ந்த நெடுங்கொடி,
'ஓடும் எங்கள்
பசி' என்(று) உவந்தெழுந்(து)
ஆடு கின்ற
அலகையின் ஆடவே!

[துன்றி — அடர்ந்து. விசும்பு — ஆகாயம். கரந்தென — மறைத்தாற்போல. நீடி — நீண்டு. அலகை — பேய்.]

'நம் பேய்ப் பசியும் ஓடிப்போகும் இந்தப் போர்க்களத்திலே' என்று தான் பேய்கள் ஆடுகின்றனவோ?—என்று பிரமிக்கிறோம்.

இந்த அரக்க வீரர்கள் ஏறி வரும் தேர்களில் விசித்திரம் விசித்திரமான பிராணிகள் பூட்டப் பெற்றிருக்கின்றனவாம்:

ஆளிகள் பூண்டன,
அரிகள் பூண்டன;
மீளிகள் பூண்டன;
வேங்கை பூண்டன;
ஞாளிகள் பூண்டன,
நரிகள் பூண்டன;
கூளிகள் பூண்டன;
குதிரை பூண்டன.

[ஆளி — யாளி; யானைபோல் துதிக்கை யுள்ளதும், சிங்கம்போல் யானையைக் கொல்வதும், இப்போது உலகத்தில் இல்லாததுமான ஒரு வகை மிருகம். அரி—சிங்கம். மீளி—வலிமையுள்ள ஆள். ஞாளி—நாய். கூளி—பூதம்.]

சாதாரணமாய்க் குதிரைகள் பூட்டி வரும் இரதங்களையும் வண்டிகளையும் கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கேயோ சிங்கம் புலி போன்ற துஷ்ட மிருகங்களுடன், இஷ்ட மிருகமான நாயும் கபட மிருகமான நரியும் தேர் இழுத்து வருகின்றனவாம். அது மட்டுமா? நாம் ரிக்ஷாக்களில் ஏறி நரவாகனராய் இந் நாகரிக உலகிலும் காட்சியளிப்பது போல், இந்த இரக்கமில்லாத அரக்கர்களில் சிலர் வலிமையுள்ள ('கட்டுமஸ்தான' உடம்புள்ள) ஆசாமிகளையும் தங்கள் கோச்சுவண்டிகளில் பூட்டி ஓட்டி வருகிறார்களாம். (ஆனால் நமது ரிக்ஷாக்களை வலிமை யுள்ளவர்களா — அரைப் பட்டினிக்காரர்கள் அல்லவா — இழுக்கிறார்கள்?)

இத்தகைய அரக்க நாச வீரர்கள் ராமனை நோக்கி நெருங்கி வருகிறார்கள்,

அருள் திரண்ட
அருக்கன்தன் மேல்வழங்(கு)
இருள் திரண்டுவந்(து)
ஈண்டிய தென்னவே!

[அருக்கன்—சூரியன். ஈண்டியது—நெருங்கியது.]

அருளின்மேல் ஏதோ இருள் — காரிருள், பேரிருள் — திரண்டு வருகிறது — என்ன விபரீதம்!